بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

இதழ் 34

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரி 1445 - ஸஃபர்- 6★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1402 - ஸஹீர் 24

★ 24 ஆகஸ்ட் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَنُنَزِّلُ مِنَ الْقُرْاٰنِ مَا هُوَ شِفَآءٌ وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ ۙ وَلَا يَزِيْدُ الظّٰلِمِيْنَ اِلَّا خَسَارًا ﴿۸۳﴾

**பொருள்**

நம்பிக்கையாளர்களுக்கு குணமளிப்பதாகவும், அருளாகவும், அநீதி இழைப்பவர்களுக்கு நஷ்டத்தை அதிகரிக்கக் கூடியதாகவும் திருக்குர்ஆனிலிருந்து (படிப்படியாகப் போதனைகளை) இறக்கிக் கொண்டிருக்கின்றோம்.

(17: 83)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நினைவிற் கொள்ளுங்கள்! சொர்க்க வாழ்க்கை இவ்வுலகிலிருந்தே துவங்கிவிடாத வரை மேலும், இவ்வுலகில் அதன் இன்பத்தை சுவைக்காத வரை திருப்தி கொள்ளவும் கூடாது நிம்மதி அடையவும் கூடாது**

**ஏனெனில் எவர் இவ்வுலகில் எதனையும் பெறுவதில்லையோ மேலும் எதிர்காலத்தில் சொர்க்கத்திற்கான நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் வீணான ஆசை கொள்கின்றார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### இறை வணக்கத்தின் உண்மைத்துவம்

விவசாயி நிலத்தை சுத்தமாக்குவதைப் போன்று மனிதன் எல்லா வகையான கடினங்களையும், கோணல்களையும் அகற்றி விட்டு (தனது) உள்ளம் எனும் நிலத்தை தூய்மையாக்கிக் கொள்வதையே உண்மையில் இறை வணக்கம் என்று கூறுகின்றோம்........ அதேபோன்று உள்ளம் எனும் நிலத்தில் எந்த கூழாங் கற்களும், சீரற்ற தன்மைகளும் இல்லாத வகையில் ஆன்மா மட்டுமே இருக்கின்ற வகையில் தூய்மையாக இருப்பதன் பெயர் இறை வணக்கம் ஆகும்.

ஆக, இந்த சீர்படுத்துதல் மற்றும் சுத்தம் கண்ணாடியில் செய்யப்பட்டால் அதில் வடிவம் தென்பட்டு விடும். மேலும், நிலத்தில் அந்த சுத்தம் செய்யப்பட்டால் பின்னர் அதில் பல வகையான கனிகள் விளைந்து விடும். எனவே இறை வணக்கத்திற்காக படைக்கப்பட்டுள்ள மனிதன் (தனது) உள்ளத்தை தூய்மைப்படுத்தினால் மேலும், அதில் எவ்விதமான கோணலும், சீரற்றத் தன்மையும், கூழாங்கற்களும், தங்கிவிடாமல் ஆக்கிக் கொண்டால் அதில் இறைவன் தென்படுவான்.

### சொர்க்கமும்-நரகமும்

சொர்க்க வாழ்க்கை இவ்வுலகிலிருந்தே ஆரம்பமாகி விடுகின்றது. மேலும், அதேபோன்று இறைவனிடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் முற்றிலும் பிரிந்து வாழ்கின்ற இருண்ட வாழ்க்கை நரக வாழ்வின் முன்மாதிரியாகும். மரணத்திற்கு பிறகு கிடைக்கின்ற சொர்க்கம் என்பது இவ்வுலக சொர்க்கத்தின் அசல் நிலையாகும். மேலும், எனவேதான், சொர்க்க வாசிகள், சொர்க்கத்தின் அருட்கொடைகளை சுவைக்கும்போது..

هٰذَا الَّذِيْ رُزِقْنَا مِنْ قَبْلُ ۙ وَاُتُوْا بِهٖ مُتَشَابِهًا ۗ وَلَهُمْ فِيْهَآ اَزْوَاجٌ مُّطَهَّرَةٌ ۙ وَّهُمْ فِيْهَا خٰلِدُوْنَ ﴿۲۶﴾

என்று கூறுவார்கள். (அல்பக்கரா: 26)

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்

**ஸுபுஹ் தொழுகை குறிப்பாக அல்லாஹ்விற்கு முன்னால் சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும் சிறப்பான வகையில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஏனெனில், மனிதன் அந்நேரத்தில் சுகமான தூக்கத்தை விட்டு விட்டு எழுகின்றான்.**

اَقِمِ الصَّلٰوةَ لِدُلُوْكِ الشَّمْسِ اِلٰى غَسَقِ الَّيْلِ وَقُرْاٰنَ الْفَجْرِ ۗ اِنَّ قُرْاٰنَ الْفَجْرِ كَانَ مَشْهُوْدًا ﴿۷۹﴾

(17:79)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனங்களில் முஸ்லிம்களுக்கு வரவிருக்கும் அபாயகரமான கடினங்களை எதிர்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. ஒரு பக்கம், ஹிஜ்ரத்திற்கு பிறகு வெளிப்படையில் இறை வணக்கம் செய்யக் கூடிய அந்த சமுதாயங்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. மேலும்,முஸ்லிம்களின் சோம்பல் அவர்களுக்கு ஆட்சேபனை செய்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கக் கூடியதாக இருந்தது. மற்றொரு பக்கம், முஸ்லிம்களுக்கு விரைவாக வெற்றிகள் கிடைக்க இருந்தன. அதனால் இறை வணக்கத்தில் சோம்பல் தோன்றி விட முடியும். எனவே இரண்டு விவகாரங்களையும் கருத்தில் கொண்டவாறு முஸ்லிம்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அதாவது நீங்கள் எதிரிகளின் ஏச்சுப் பேச்சுகளுக்கு இஸ்லாத்தை இலக்காக்கி விடாதீர்கள். மேலும், சோம்பேறிகளாக மாறி இறைவனின் அருட்களை இழந்து விடாதீர்கள் என்று கூறப்பட்டது.

இந்த வசனத்தில் ஐவேளை தொழுகைகளுக்கான நேரங்கள் எடுத்துரைக்கப்பட்டு விட்டன. لِدُلُوْكِ . என்பதற்கு மூன்று பொருள்கள் உள்ளன. ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் ஒவ்வொரு

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்

## நபிமொழி

(2419) ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ரலி) இவ்வாறு கூறிவந்தார்கள்:

நான் சூரா ஃபுர்கானை எவ்வாறு கற்றுக் கொடுத்து வந்தேனோ அதற்கு மாற்றமாக வேறு வகையில் ஹஸ்ரத் ஹிஷாம் பின் ஹகீம் பின் கஸாம் (ரலி) அவர்கள் (ரலி) ஓதுவதை நான் கேட்டேன். எனக்கு இந்த சூராவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்திருந்தார்கள். நான் அவரை கண்டிப்பதற்கு முற்பட்டேன். எனினும், அவர் தொழுவதற்கான அவகாசத்தை நான் வழங்கினேன். அதன் பிறகு, நான் அவருடைய அங்கியை நெஞ்சிலிருந்து பிடித்து அவரை இழுத்தேன். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்றேன். சூரா ஃபுர்கானை தாங்கள் எவ்வாறு எனக்கு கற்றுத் தந்தீர்களோ அதற்கு மாற்றமாக வேறு வகையில் இவர் ஓதுவதை நான் கேட்டேன் என்று நான் கூறினேன். அவரை விட்டு விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், அதனை ஓதுங்கள்! என்று அவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்.

ஆக, அவர் ஓதினார். இவ்வாறே இறங்கியுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.அதன் பிறகு, நீங்கள் ஓதுங்கள் என்று என்னிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் ஓதினேன். அப்போது இவ்வாறே இறங்கியுள்ளது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (பின்னர் கூறினார்கள்:) திருக்குர்ஆன் ஏழு (கிராஅத்)முறைகளில் இறங்கியுள்ளது. நீங்கள் அவற்றில் எளிமையானதை ஓதிக் கொள்ளுங்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் குஸூமாத், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றிலிருந்து குறிப்புகள் & பத்ர் போரின் முக்கியத்துவம் மற்றும் அதன் விளைவுகள் மேலும் பத்ர் போர் ஸஹாபிகளின் சிறப்புகள் & யூ.கே ஆண்டு மாநாட்டையொட்டி விருந்து உபசரிப்பின் முக்கியத்ததுவம் & ஊழியர்களுக்கும் விருந்தினர்களுக்கும் பொன்னான அறிவுரைகள்**

**அல்லாஹ் நமக்கு குறிப்பாக பத்ர் போரின் முக்கியத்துவம் மற்றும் புரிதலை வழங்குவானாக! நாம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரின் வருகையின் நோக்கத்தைப் புரிபவர்களாக இருப்போமாக! முஸ்லிம் சமுதாயமும் இந்த பத்ர் நிகழ்வின் உண்மைத்துவத்தைப் புரியட்டுமாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்துள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அடையாளம் காணட்டுமாக! இவ்வாறு இந்த முஸ்லிம்கள் தாம் இழந்த அந்த மகத்துவத்தை மீண்டும் பெறுவார்களாக!**

**கைதிகளுடன் மென்மையுடனும், பரிவுடனும் நடந்து கொள்ளும்படியும் அவர்களின் ஓய்வை கருத்தில் கொள்ளுமாறும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வலியுறுத்தியுள்ளார்கள்**

**இந்த சமுதாயத்தில் தோன்றக் கூடிய மஹ்தியின் ஓர் அடையாளமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை குறிப்பிட்டு உள்ளார்கள். அதாவது, அவரிடமும் ஒரு புத்தகம் இருக்கும். அதில் பத்ர் போர் ஸஹாபிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 313 ஸஹாபிகளின் பெயர் இருக்கும்**

**ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொருவரையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினராக கருதி ஜல்ஸாவின் பல்வேறு டியூட்டிகளில் அமர்த்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் தொண்டாற்ற வேண்டும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 ஜுலை 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **21 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பத்ர் யுத்தம் தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை அம்சங்கள் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாக மேற்கொண்டு சில விஷயங்களை முன் வைக்கின்றேன். பத்ர் யுத்தம் முடிந்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறைபிடிக்கப்பட்டவர்களோடு நல்ல முறையில் நடந்து கொண்டது பற்றி தபக்காத் இப்னு ஸஃது என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

பத்ர் போரில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் வந்தபோது, அவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் அப்பாஸூம் இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்று இரவு விழித்துக் கொண்டிருந்தார்கள். அன்னாரின் ஸஹாபிகளில் ஒருவர், அல்லாஹ்வின் நபி (ஸல்) அவர்களே! எந்த விஷயம் தங்களை விழித்திருக்க வைக்கிறது? என்று கேட்டார். அப்பாஸின் முனகல் சத்தம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, ஒருவர் சென்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் கட்டைத் தளர்த்தி விட்டார். சில கயிறுகள் கட்டப்பட்டிருந்தன ; லேசாக்கி விட்டார்.

எனக்கு அப்பாஸின் முனகல் சத்தம் கேட்கவில்லையே! என்ன விஷயம்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். நான் அன்னாரின் கட்டை சற்று லேசாக்கி விட்டேன் என்று ஒருவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பின்னர், எல்லாக் கைதிகளுக்கும் அப்படியே செய்யுங்கள். என் உறவினர் என்று நினைத்து ஒருவருக்கு மட்டும் அவ்வாறு செய்வது சரியல்ல.
(அத்தபக்காத்துல் குப்ரா லி இப்னி ஸஃது தொகுதி 4, பக்கம் 9, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்,லெப்னான்-2012)

பத்ர் யுத்தத்தில் சிறை பிடிக்கப்பட்டவர்கள் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் குறிப்பிட்டுள்ள விளக்கங்களில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

மூன்று நாட்கள் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானம் இருந்த ஊரில் தங்கினார்கள். தம் ஷஹீதுகளுக்குக் கஃபனிடுதல், அவர்களை நல்லடக்கம் செய்யதல் மற்றும் காயமடைந்த தம் மக்களுக்கு மருந்து போடுதல் ஆகிய நோக்கங்களில் கழித்தார்கள். அந்த நாட்களிலேயே போர்ச் செல்வங்கள் ஒன்று சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டன.

எண்ணிக்கையில் 70 பேர் இருந்த, நிராகரிப்பாளர்களின் கைதிகள் பாதுகாக்கப்பட்டு பல்வேறு முஸ்லிம்களின் பொறுப்புகளில் கொடுக்கப்பட்டு விட்டார்கள். மேலும் சிறைபிடிக்கப்பட்டவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்; பரிவுடன் நடந்து கொள்ளுங்கள். மேலும் அவர்களின் நிம்மதியைக் கருத்தில் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வலியுறுத்திக் கூறினார்கள்.

தம் எஜமானரின் ஒவ்வோர் ஆசையையும் நிறைவேற்ற வேண்டும் என்ற பேரன்பு கொண்டிருந்த ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த அறிவுரைப்படி எந்த அளவுக்கு அழகான முறையில் செயல்பட்டார்கள் என்றால், உலக வரலாற்றில் இதற்கு நிகர் கிடைப்பதில்லை. இந்தக் கைதிகளில் ஒரு கைதியான அபூ அஸீஸ் பின் உமைர் சுயமே கூறுகிறார்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையின் காரணமாக அன்ஸார் ஸஹாபிகள் எனக்கோ சுட்ட ரொட்டியைக் கொடுத்து வந்தார்கள். ஆனால், தாம் பேரீத்தம் பழங்கள் போன்றவற்றை சாப்பிட்டு வாழ்வைக் கழித்து வந்தார்கள். பலமுறை இப்படி நடந்துள்ளது. அவர்களிடம் ஒரு சிறு ரொட்டித் துண்டு இருந்தாலும் அவர்கள் அதை எனக்குத் தந்து விடுவார்கள்; தாம் உண்ண மாட்டார்கள். நான் எப்போதாவது வெட்கத்தால் திருப்பி கொடுத்து விட்டால் அவர்கள் வற்புறுத்தி மீண்டும் எனக்கே தந்து விடுவார்கள்.

எந்த கைதிகளிடம் போதுமான அளவு ஆடைகள் இருக்கவில்லையோ அவர்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டன. அப்பாஸூக்கு அப்துல்லாஹ் பின் உபை தன் மேலாடையை கொடுத்து விட்டார்.

ஸர் வில்லியம் முயூர் சிறைபிடிக்கப்பட்டவர்களுடன் இந்த பரிவான அணுகுமுறை பற்றி கீழ்வரும் சொற்களில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். அவர் எழுதுகிறார்:

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க அன்ஸார் மக்களும், முஹாஜிர்களும் காஃபிர் கைதிகளுடன் மிகவும் அன்போடும், பரிவோடும் நடந்து கொண்டார்கள். சில கைதிகளின் சுய சான்று வரலாற்றில் இந்த சொற்களில் கூறப்பட்டுள்ளது:

இறைவன் மதீனா வாழ் மக்களுக்கு நன்மை செய்யட்டுமாக! அவர்கள் எங்களை பயண விலங்குகள் மீது அமர்த்தி விட்டு, தாம் நடந்து சென்று வந்தார்கள். சமைத்த கோதுமை ரொட்டிகளை எங்களுக்குத் தருவார்கள். தாம் வெறும் பேரீத்தம் பழங்களை சாப்பிட்டு இருப்பார்கள்.

எனவே, முயூர் ஸாஹிப் எழுதுகிறார்: இந்த நல்ல முறையில் நடந்து கொண்டதன் தாக்கத்தினால் சில கைதிகள் முஸ்லிம் ஆகிவிட்டார்கள் என்பதை அறிந்து நாம்

வியப்படையக் கூடாது. சிறைபிடிக்கப்பட்டவர்களுடன் இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டபோது, அவர்களில் சிலர் முஸ்லிம்கள் ஆகிவிட்டார்கள். இப்படிப்பட்ட மக்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். எந்தக் கைதிகள் இஸ்லாத்தை ஏற்கவில்லையோ அவர்கள் மீதும் நல்லமுறையில் நடந்து கொள்ளப்பட்ட இந்த விஷயத்தினால் மிக நல்ல தாக்கம் இருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ(ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன் பக்கம் - 365)

பத்ர் யுத்தத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் தாக்கங்கள் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பத்ர் வெற்றியின் நற்செய்தியை எடுத்துக் கொண்டு அப்துல்லாஹ் பின் ரவாஹா மற்றும் ஸைது பின் ஹாரிஸா ஆகிய இருவரும் மதீனா வந்தடைந்தார்கள். அவர்களின் நாவிலிருந்து வெற்றியின் நற்செய்திக்கான அறிவிப்பைக் கேட்டு அல்லாஹ்வின் எதிரி கஅப் பின் அஷ்ரஃப் அவர்களைப் பொய்ப்பிக்க ஆரம்பித்தான்.

அவன் கூறினான்: ஒருவேளை முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்தப் பெரும்பெரும் தலைவர்களைக் கொன்று விட்டார் என்றால் பூமிக்கு மேல் இருப்பதை விட பூமிக்குக் கீழ் இருப்பது சிறந்ததாகும். அதாவது, உயிரோடு இருப்பதை விட மரணிப்பது சிறந்ததாகும்

(ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 250- தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2002).

அல்லாமா ஷிப்லீ நுஃமானீ தமது நூலில் பத்ர் யுத்தத்தின் விளைவுகளைப் பற்றி எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

பத்ர் யுத்தம் மார்க்க மற்றும் நாட்டு நிலைமைகளில் பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்தியது. உண்மையில், இது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கான முதல் அடியாக இருந்தது. குறைஷிகளின் பெரும்பெரும் தலைவர்கள் அனைவரும்- அவர்களில் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் முன்னேற்றத்தின் பாதையில் இரும்பு வேலியாக இருந்தார்கள்- அவர்கள் அழிந்து விட்டார்கள்.

உத்பா மற்றும் அபூ ஜஹ்ல் -ன் மரணமானது குறைஷிகளின் பொது ஆளுமையின் மகுடத்தை அபூ ஸுஃப்யானின் தலையில் வைத்தது. அதன் மூலம் உமைய்யா அரசு ஆரம்பமானது. ஆனால், குறைஷிகளின் அசல் ஆற்றல் மற்றும் வலிமையின் தரம் குறைந்துவிட்டது. அதுவரை மதீனாவில் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸுலூல் பகிரங்கமான காஃபிராக இருந்தான். ஆனால், இப்போது அவன் வெளிப்படையாக இஸ்லாத்தின் வட்டத்திற்குள் வந்துவிட்டான். பத்ர் வெற்றிக்குப் பிறகு, அவனும் வெளிப்படையாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். ஆனாலும், வாழ்நாள் முழுவதும் நயவஞ்சகனாக இருந்தான். அந்த நிலையிலேயே உயிரை விட்டான்.

தொடர்ச்சியான நிகழ்வுகளைப் பார்த்த அரபுக் கோத்திரங்கள் முஸ்லிம் ஆகவில்லை என்றாலும் அச்சமடைந்தன. பல கோத்திரங்கள் முஸ்லிம் ஆகவில்லைதான். ஆனால், வெற்றியைப் பார்த்து கண்டிப்பாக அச்சமடைந்து விட்டன. முஸ்லிம்களுக்கு எதிராக அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பதை விட்டு விட்டார்கள் அல்லது பயந்து விட்டார்கள்.இந்த சாதகமான சூழலுடன் எதிரான காரணிகளிலும் புரட்சி ஆரம்பித்து விட்டது.

யூதர்களுடன் அவர்கள் எல்லா விஷயத்திலும் ஒரு பக்கமாக இருப்பார்கள் என்று உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. ஆனால், இந்த பகிரங்கமான வெற்றி அவர்களிடம் பொறாமைத் தீயை மூட்டி விட்டது. அவர்களால் அதை வரையறையில் வைக்க முடியவில்லை. குறைஷிகள் முதலில் கஸ்ரமீக்காக அழுதார்கள். பின்னர், ஒவ்வொரு வீடும் இழவு வீடாக இருந்தது. பத்ரில் கொல்லப்பட்டவர்களுக்காக பழிதீர்ப்பதற்காக மக்காவின் பிள்ளைகள் உட்பட அமைதியின்றி தவித்தார்கள். ஆக, ஸுவைக் நிகழ்வும் உஹது போரும் இந்த உத்வேகத்தின் வெளிப்பாடே ஆகும்.

(ஷிப்லீ நுஃமானீ அவர்களின் நூல்- ஸீரத்துன்னபீ தொகுதி 1, பக்கம் 210 -211, லாஹூர்)

பத்ர் வெற்றியின் விளைவுகளை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

அதுவரை மதீனாவில் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் பல மக்கள் இணை வைப்பில் நிலைபெற்றிருந்தார்கள். பத்ர் வெற்றி அவர்களிடம் ஓர் அசைவை ஏற்படுத்தி விட்டது. அவர்களில் பல மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த மகத்துவ மிக்க வழக்கத்திற்கு அப்பாற்பட்ட வெற்றியைப் பார்த்து இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை ஏற்க ஆரம்பித்து விட்டார்கள். இதற்குப் பிறகு மதீனாவிலிருந்து சிலை வணக்க அங்கங்கள் மிகவும் வேகமாக குறைய ஆரம்பித்து விட்டன.

ஆனால் எப்படிப்பட்ட சிலரும் இருந்தார்கள் என்றால் அவர்களுடைய உள்ளங்களில் இஸ்லாத்தின் இந்த வெற்றியானது காழ்ப்புணர்ச்சி மற்றும் பொறாமையின் தீப்பொறியை எறிய வைத்து விட்டது. அவர்கள் பகிரங்கமாக எதிர்ப்பதை சந்தர்ப்பத்திற்கு பொருத்தமற்றதாகக் கருதி வெளிப்படையாகவோ இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள்தான்; ஆனால், உள்ளுக்குள்ளேயே வேரறுக்கும் நோக்கத்தில் நயவஞ்சகர்களின் பிரிவில் இணைந்து விட்டார்கள்.

கடைசியாகக் கூறப்பட்ட இந்த மக்களில் மிகவும் முக்கியமானவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸுலூல் ஆவான். அவன் கஸ்ரஜ் கோத்திரத்தின் நன்கு பெயர்போன ஒரு தலைவனாக இருந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்ததன் விளைவாக தன் தலைமைப் பொறுப்பு பறிக்கப்படுவதற்கான பெருந்துயரம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. இவன் பத்ருக்குப் பிறகு வெளிப்படையாக முஸ்லிம் ஆகிவிட்டான். ஆனால், இவனுடைய உள்ளம் இஸ்லாத்திற்கு எதிராக காழ்ப்புணர்ச்சி மற்றும் உள்ளப் பகைமையால் நிறைந்திருந்தது. நயவஞ்சகர்களின் தலைவனாக ஆகி இவன் மறைமுகமாக இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக குழப்பம் செய்ய ஆரம்பித்து விட்டான்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ(ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன் பக்கம் - 376)

மேற்கொண்டு கூறுகிறார்கள்: பத்ர் யுத்தத்தின் தாக்கம் காஃபிர்கள், முஸ்லிம்கள் என இரு சாராருக்கும் மிகவும் ஆழமானதாக நீண்ட காலம் இருக்கக் கூடியதாக இருந்தது. எனவே, இஸ்லாமிய வரலாற்றில் இந்தப் போருக்கு ஒரு சிறப்பு முக்கியத்துவம் உள்ளது. எதுவரை என்றால், திருக்குர்ஆனில் இந்தப் போருக்கு யவ்முல் ஃபுர்கான என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. அதாவது, இஸ்லாம் மற்றும் நிராகரிப்புக்கு இடையில் ஒரு பகிரங்கமான தீர்ப்பு வழங்கப்பட்ட நாள்.

பத்ர் யுத்தத்திற்குப் பிறகும் குறைஷிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் போர்கள் நடந்தனதான்; மிக கடுமையான போர்களும் நடந்தனதான்; முஸ்லிம்களுக்கு சில இக்கட்டான சூழ்நிலைகளும் வந்தனதான்; ஆனால் பத்ர் யுத்தில் மக்கத்து காஃபிர்களின் முதுகெலும்பு முறிந்துவிட்டிருந்தது. அதை பிற்காலத்தின் எந்த அறுவை சிகிச்சை செயலாலும் நிரந்தரமாக சரி செய்ய முடியவில்லை. கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இது ஒரு பெரிய தோல்வியாக இருக்கவில்லைதான்.

குறைஷிகள் போன்ற ஒரு சமுதாயத்தில் சிறந்த எழுபது வீரர்கள் கொல்லப்படுவது என்பது ஒருபோதும் சமுதாய அழிவு என்று அழைக்கப்பட முடியாது. உஹது போரில் இதே எண்ணிக்கை முஸ்லிம்களில் கொல்லப்பட்டவர்களுடையதாக இருந்தது. ஆனால், இந்த இழப்பு முஸ்லிம்களின் வெற்றிப் பாதையில் ஒரு தற்காலிக தடையாகக் கூட இருக்கவில்லை. ஆனால், அப்பொழுதோ முஸ்லிம்கள் மிகவும் பலவீனமானவர்களாக இருந்தார்கள்.

பிறகு, ஏன் பத்ர் யுத்தம் யவ்முல் ஃபுர்கான என்று அழைக்கப்பட்டது? இந்தக் கேள்விக்குப் பதிலாக சிறந்த சொற்கள் திருக்குர்ஆன் கூறிய அந்தச் சொற்கள் ஆகும். அவை இவையாகும்.

يَقْطَعَ دَابِرَ الْكَافِرِيْنَ

பொருள்: நிச்சயமாக அந்த நாளில் காஃபிர்களின் வேர் அறுந்துவிட்டது.

பத்ர் யுத்தத்தின் வாள் வீச்சு காஃபிர்களின் வேர் மீது பட்டது. அது இரண்டு துண்டாக ஆகிவிட்டது. இதே வாள் வீச்சு வேருக்குப் பதிலாக கிளைகளில் பட்டிருந்தால் அதற்கு எவ்வளவு இழப்பை ஏற்படுத்தியிருந்தால் சரி; அந்த இழப்பு இந்த இழப்பிற்கு முன் ஒன்றுமற்றதாக இருந்திருக்கும். ஆனால், வேர் மீது பட்ட வாள் வீச்சு பசுமையாக இருந்த மரத்தை பார்த்துக் கொண்டிருக்கையிலேயே விறகுக் குவியலாக ஆக்கி விட்டது. காய்ந்து போவதற்குள் வேறு மரத்தோடு ஒட்டுப் போட்டுக் கொண்டு சென்றுவிட்ட அந்தக் கிளைகள் மட்டுமே தப்பின.

எனவே, பத்ர் மைதானத்தில் குறைஷிகளின் இழப்புக்கான அளவுகோல் எவ்வளவு பேர் மரணித்தார்கள்? என்பதாக இருக்கவில்லை. மாறாக, யார்? யார்? மரணித்தார்கள் என்பதாக இருந்தது. நாம் இந்தக் கண்ணோட்டத்துடன் குறைஷிகளின் கொலையுண்டவர்கள் மீது பார்வையை செலுத்தும்போது உண்மையில் பத்ர் யுத்தத்தில் காஃபிர்களின் வேர் அறுந்து விட்டது என்ற விஷயத்தில் அணு அளவும் ஐயமிருப்பதற்கான சாத்தியம் இருப்பதில்லை.

உத்பா, ஷைபா, உமையா பின் கலஃப், அபூஜஹ்ல், உக்பா பின் முஅத் மற்றும் நஸ்ர் பின் ஹாரிஸ் போன்றோர் குறைஷிகளின் சமுதாய வாழ்வின்

உயிரோட்டமாக திகழ்ந்து வந்தனர். இந்த ஆன்மா பத்ர் மைதானத்தில் குறைஷிகளை விட்டு நிரந்தரமாக பறந்து விட்டது. அவர்கள் உயிரற்ற உடலைப் போன்று ஆகிவிட்டார்கள். இந்த அழிவின் காரணமாகவே பத்ர் யுத்தம் யவ்முல் ஃபுர்கான் என்று அழைக்கப்பட்டது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ(ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன் பக்கம் - 371- 372)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

இந்தப் போருக்கே திருக்குர்ஆனில் அல்லாஹ் ஃபுர்கான் என்று பெயரிட்டுள்ளான். இந்தப் போரிலேயே அரேபியாவின் அந்தத் தலைவர்கள் - எவர்கள் இஸ்லாத்தின் பெயரை நிரந்தரமாக அழித்து விடுவோம் என்ற வாதத்துடன் வீட்டிலிருந்து புறப்பட்டார்களோ - அவர்கள் சுயமே அழிந்துவிட்டார்கள். இன்று அவர்களின் பெயரை எடுப்பவர் எவரும் இல்லாத அளவுக்கு அழிந்து போனார்கள். ஒருவேளை எவராவது இருந்தாலும் அவர் தன்னை அவர்களோடு பொருத்திக் கூறுவதைப் பெருமிதத்திற்குப் பதிலாக அவமானமாகக் கருதுகிறார்.

சுருக்கமாக, இந்தப் போரில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு மாபெரும் வெற்றியை வழங்கினான்.

(ஸீரத்துன்னபீ (ஸல்), அன்வாருல் உலூம், தொகுதி 1, பக்கம் 610)

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: முஸ்லிம்கள் மீது இதற்குப் பிறகும் அநீதிகள் இழைக்கப்பட்டன ; அவர்கள் காஃபிர்களோடு பல போர்கள் செய்ய வேண்டி வந்தன என்பதில் எந்த ஐயமும் இல்லை. முஸ்லிம்களின் கம்பீரம் அவர்கள் மீது வெளிப்பட்டு விட்டிருந்தது. யவ்முல் ஃபுர்கான் என்று திருக்குர்ஆன் கூறியுள்ள பத்ர் யுத்தம் பற்றி பைபிளிலும் ஒரு முன்னறிவிப்பு காணப்படுகிறது.

ஆக, ஏசாயா அதிகாரம் 21-இன் வசனங்கள் 13 முதல் 17 வரையில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அரேபியாவைப் பற்றிய இறையறிவிப்பு திதானியராகிய பயணக் கூட்டங்களே நீங்கள் அரேபியாவின் காடுகளில் தங்குவீர்கள். தேமாதேசத்தின் குடிமக்களே! நீங்கள் தப்பி ஓடுகிறவர்களுக்கு அப்பம் கொடுக்க எதிர்கொண்டு செல்லுங்கள். ஏனெனில், அவர்கள் வாள்களுக்கு முன்னால் இருந்தும் உருவிய வாள்களுக்கும் அம்பு ஏற்றப்பட்ட வில்லுக்கும் யுத்தத்தின் கொடுமைக்கும் தப்பி ஓடுகிறார்கள்.

இறைவன் என்னை நோக்கி ஒரு கூலிக்காரனுடைய ஆண்டுகளுக்கு சமமான ஒரே ஆண்டிலேயே கேதாருடைய மகிமையெல்லாம் அற்றுப் போகும் என்று கூறினான். கேதாரின் வீரமான மக்களில் வில் எறியும் வீரர்களில் எஞ்சியிருப்பவர்கள் குறைந்து விடுவார்கள். இஸ்ரவேலின் இறைவன் இதைக் கூறினான்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஏசாயா நபியின் இந்தக் கூற்றில் இவ்வாறு முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது: ஹிஜ்ரத் காலத்திலிருந்து சரியாக ஓராண்டு கழிந்ததும் அரேபியாவில் எப்படிப்பட்ட ஒரு போர் நிகழும் என்றால், அதில் கேதாருடைய மகிமையெல்லாம் மண்ணோடு மண்ணாகி விடும். எவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஓடிவிட்டார் என்று அவதூறு கூறினார்களோ அவர்கள் தம் படை இருக்கும்போதே புறமுதுகிட்டு ஓடுவார்கள். அதுவும், அவர்களுக்கு ஆணையிடுவார்கள். தளபதிகளின் சடலங்கள் போர்க் களத்தில் கிடக்கும் நிலையில் (புறமுதுகிட்டு ஓடுவர்).

கடைசியில் மக்கா நகரம் தன் தளபதிகளை இழந்து, இதற்கு முன்பு தனக்கு இருந்த அந்த கம்பீரத்தை இழந்து நிற்கும். இவ்வாறே திருக்குர்ஆன் ஒரு பதினோராவது இரவைப் பற்றி தெரிவித்து இவ்வாறு முன்னறிவிப்பு செய்திருந்தது; ஹிஜ்ரத்திற்கு சரியாக ஓராண்டுக்குப் பின் காஃபிர்களின் முழு ஆற்றலும் உடைந்து விடும். முஸ்லிம்களுக்கு வெற்றி வாகையின் விடியல் வெளிப்பட்டு விடும்.

ஆக, சரியாக ஓராண்டுக்குப் பிறகு, பத்ர் யுத்தம் நடைபெற்றது. அதில் காஃபிர்களின் பெரும் பெரும் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லிம்களுக்கு அவர்கள் மீது பகிரங்கமான வெற்றி கிடைத்தது.

அன்னார் கூறுகிறார்கள்: பாருங்கள்! மதீனாவுக்கு வந்த பிறகு, முதல் ரமலான் வரை இந்த முன்னறிவிப்புக்குப் பத்து ஆண்டுகள் நிறைவடைந்திருந்தன. ரமலானிலிருந்து பதினோராவது ஆண்டு ஆரம்பமானது. இந்த ஓர் ஆண்டு கழிந்ததும் இரண்டாவது ஆண்டு ரமலான் 17 அன்று பத்ர் யுத்தம் நடந்தது. அதில் பெரும் பெரும் காஃபிர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களின் அநீதியான தாக்குதல்கள் முடிவுக்கு வந்து விட்டன. முஸ்லிம்கள் மீது வந்திருந்த அந்த பதினோறாவது இரவு சரியாக ஓராண்டு கழிந்ததும் விலகி விட்டது. முஸ்லிம்கள் வெற்றி வாகையின் விடியலை அல்லாஹ்வின் அருளால் அவனுடைய உதவி ஆதரவால் கண்டு விட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8, பக்கம் 515)

பத்ரில் கலந்து கொண்ட ஸஹாபிகளின் சிறப்பு பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, தாங்கள் முஸ்லிம்களில் பத்ர் போரில் கலந்து கொண்டவர்களுக்கு என்ன அந்தஸ்தை அளிக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு, சிறந்த முஸ்லிம்கள் என்று அல்லது இதேபோன்று வேறு ஏதோ ஒரு சொல்லை ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள்: இதே போன்று பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட அந்த வானவர்களும் சிறந்தவர்கள் ஆவார்கள்.

(ஸஹீஹ் அல்புகாரி, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 3992)

இப்போது நான் எடுத்துக் கூறப்போகும் நிகழ்வு முதலில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் வாழ்க்கை நிலைகளில் எடுத்துக் கூறப்பட்டு விட்டதுதான்; ஆனால், இங்கும் இதன் முக்கியத்துவம் கருதி எடுத்துக் கூறிவிடுகின்றேன்.

உபைதுல்லாஹ் பின் உபை ராஃபி கூறினார்கள்: நான் இதை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடமிருந்து செவியுற்றேன். அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னையும், ஸுபைரையும் மிக்தாத் பின் அஸ்வதையும் அனுப்பினார்கள்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் புறப்படுங்கள். நீங்கள் ரவ்ஸா காக் எனும் இடத்தை அடைந்ததும், அங்கு ஒட்டகத்தின் மீது பயணத்திருக்கும் ஒரு பெண் உங்களுக்குக் கிடைப்பாள்; அவளிடம் ஒரு கடிதம் இருக்கிறது. நீங்கள் அந்தக் கடிதத்தை அவளிடமிருந்து வாங்கி விடுங்கள்.

நாங்கள் புறப்பட்டோம். எங்களுடைய குதிரைகள் வேகமாகப் பாய்ந்தோடி எங்களை அழைத்துச் சென்றன. நாங்கள் ரவ்ஸா காக் எனும் இடத்தை அடைந்ததும், அங்கு ஒட்டகத்தின் மீது பயணத்திருக்கும் ஒரு பெண் இருப்பதைக் கண்டோம். நாங்கள் அவளிடம் கடிதத்தை வெளியே எடு என்றோம். அவள் என்னிடம் எந்த கடிதமும் இல்லை என்றாள். நாங்கள் நீ கடிதத்தை எடுத்தே ஆக வேண்டும்; இல்லையென்றால், நாங்கள் உன் ஆடையை அவிழ்த்து விடுவோம்; சோதனை போடுவோம் என்றோம். இதைக் கேட்டதும் அவள் தனது கொண்டையிலிருந்து (கடிதத்தை) வெளியே எடுத்தாள். நாங்கள் அந்தக் கடிதத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தோம். (அதைத் திறந்து) பார்த்தபோது, அதில் ஹாதிப் பின் அபீ பல்தஆ சார்பாக மக்காவின் இணை வைப்பாளர்களின் பெயரில் ( அந்தக் கடிதம்) எழுதப்பட்டிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதோ ஓர் எண்ணத்தைப் பற்றி அந்த மக்களுக்குத் தகவல் கொடுக்க அவர் பார்த்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை வரவழைத்து, ஹாதிப்! இது என்ன? என்று கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் தொடர்பாக விரைவாகச் செயல்படாதீர்கள்; நான் குறைஷியர்களுடன் வந்து கலந்து விட்ட அவர்களைச் சேராத மனிதனாக இருந்தேன். தங்களுடன் இருந்த ஏனைய முஹாஜிர்களுக்கு மக்காவில் உறவுகள் இருந்தன. அவர்கள் மூலமாக இவர்கள் தம்முடைய வீடு வாசல்களையும் சொத்து பத்துகளையும் பாதுகாத்து வந்தார்கள். நான் அந்த மக்கா வாசிகளுக்கு ஏதாவது பேருதவி செய்ய வேண்டும் என்று நினைத்தேன். ஏனெனில், எனக்கு அவர்களுடன் எந்த உறவுமுறையும் இருக்கவில்லை. அவர்கள் இந்தப் பேருதவியின் காரணமாகவே எனக்கு உதவலாம் (என்று நினைத்தேன்). நான் எந்த ஒரு நிராகரிப்பின் காரணமாகவோ, மார்க்கத்தை விட்டு அகன்றதன் காரணமாகவோ இதை செய்யவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஒருபோதும் நிராகரிப்பை விரும்ப முடியாது என்று அவர் கூறினார்.

இதைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர் உங்களிடத்தில் உண்மையைக் கூறியிருக்கிறார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அனுமதி தாருங்கள்; நான் இந்த நயவஞ்சகரின் தலையை சீவிவிடுகிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவரோ பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தார். உமக்கு என்ன தெரியும்! அல்லாஹ் பத்ரில் கலந்து கொண்டவர்களைப் பார்த்துக் கூறினான்: நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் உங்களுடைய பாவங்களைத் திரையிட்டு விட்டேன்.

(சுனன் அபீ தாவூத், கிதாபுஸ் ஸுன்னா, ஹதீஸ் எண்: 4654)

அதாவது, இப்போது

இவர்களிடமிருந்து பெரிய பாவங்கள் நிகழாது. இவர்களின் முடிவு நல்லதாக அமையும். இவர்கள் நிராகரிப்பின் நிலையில் மரணிக்க மாட்டார்கள் என்பது இதற்குப் பொருளாகும்.

ஆக, ஹாதிப் (ரலி) அவர்கள் தாமே கூறிய அந்தச் சொற்களிலிருந்தே (இது) வெளிப்படுகிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, ஒருபோதும் நிராகரிப்பை விரும்பவே முடியாது.

பிறகு, ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் பத்ரில் கலந்து கொண்டவர்கள் மீது பார்வையை செலுத்தியிருக்கின்றான். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் உங்களை மன்னித்து விட்டேன் என்று கூறினான். அதாவது, நிராகரிப்பு நிலையைத் தவிர சாதாரண பிழைகளையும் பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுவான். வேறு சொற்களில், இங்கு ஒருபோதும் அவர்களிடம் நிராகரிப்பின் நிலை திரும்பாது; அவர்களின் முடிவு நல்லதாக அமையும் என்று அல்லாஹ் உத்திரவாதம் அளித்து விட்டான். இதற்கு இந்த ஒரு பொருளும் இருக்கிறது. அதாவது சில பிழைகளும், பாவங்களும் நிகழ்ந்தாலும் மனிதனிடம் எதிர்பார்க்கப்படுவதன் கீழ் நிகழும். அல்லாஹ் அவற்றை மன்னித்து விடுவான்.

நம்பிக்கை கொண்டவர்களின் தாயார் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பத்ரிலும் ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் கலந்து கொண்டவர்கள் எவரும் நரக நெருப்பில் நுழைய மாட்டார் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. இன்ஷா அல்லாஹ்.

நான் ஹுஸூர் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!

وَاِنْ مِّنْكُمْ اِلَّا وَارِدُهَا كَانَ عَلٰى رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا

என்று அல்லாஹ் கூறவில்லையா?

பொருள்: உங்களில் அநீதியிழைப்பவர்களான எவரும் அதில் இறங்காமல் இருக்கப் போகிறவர் எவருமில்லை.

இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் இந்தக் கூற்றை நீர் கேட்கவில்லையா?

ثُمَّ نُنَجِّى الَّذِيْنَ اتَّقَوْا وَّنَذَرُ الظّٰلِمِيْنَ فِيْهَا جِثِيًّا

பொருள்: பிறகு, இறையச்சம் கொண்டவர்களை நாம் காப்பாற்றி விடுவோம். மேலும், நாம் அநீதியிழைப்பவர்களை அதில் மண்டியிட்டவர்களாக விழ விட்டுவிடுவோம். (சுனன் இப்னு மாஜா, கிதாபுஸ் ஸுஹ்த், ஹதீஸ் எண்: 4281)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்திலும் ஸஹாபிகளுக்கான ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்ட போது பத்ர் போர் ஸஹாபிகளுக்கு சிறப்பான ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டன. பத்ர் ஸஹாபிகள் தாமும் கூட பத்ரில் கலந்து கொண்டதற்காகக் குறிப்பாக பெருமைப்பட்டு வந்தார்கள்.

ஆக, முயூர் ஸாஹிப் எழுதுகிறார்:

பத்ர் ஸஹாபிகள் இஸ்லாமிய சமுதாயத்தின் உயர்வான உறுப்பினர்களாகக் கருதப்பட்டார்கள். ஹஸ்ரத் ஸஃது பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் 80 வயதில் மரணிக்க இருந்தபோது அன்னார் (ரலி) கூறினார்கள்: நான் பத்ர் நாளில் அணிந்த அந்த மேலங்கியை எனக்குக் கொண்டு வந்து தாருங்கள்.

அன்னாரின் கரங்களால் பிற்காலத்தில் ஈரான் வெற்றி காணப்பட்டது. அன்னார் கூஃபா நகரத்தைத் தோற்றுவித்தவராகவும் ஈராக்கின் ஆளுநராகவும் ஆனார்கள். ஆனால், இவர்களின் பார்வையில் இந்த அனைத்து கண்ணியமும், பெருமையும், பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட கண்ணியத்திற்கும் பெருமைக்கும் முன்னால் முற்றிலும் ஒன்றுமற்றவையாக இருந்தன.

பத்ர் யுத்தம் அன்று அணிந்த ஆடையை அவர்கள் தமக்கு அனைத்துப் பொன்னாடைகளையும் விடப் பெரிய பொன்னாடையாகக் கருதி வந்தார்கள். இந்த ஆடையில் சுற்றியே அவர்களைக் கப்ரில் இறக்க வேண்டும் என்பதே அவர்களுடைய கடைசி ஆசையாக இருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ(ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன் பக்கம் - 373)

பத்ரில் கலந்து கொண்ட ஸஹாபிகளின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் இந்த விஷயத்தின் மூலமாகவும் கணிக்கலாம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த சமுதாயத்தில் வரவிருக்கும் மஹ்தியின் ஓர் அடையாளமாக இவ்வாறு கூறியுள்ளார்கள்: அவரிடமும் ஒரு நூல் இருக்கும். அதில் அவரிடம் பத்ர் ஸஹாபிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 313 தோழர்கள் பெயர் இருக்கும்.

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

வாக்களிக்கப்பட்ட மஹ்தியிடம் அச்சிடப்பட்ட ஒரு நூல் இருக்கும்; அதில் அவருடைய 313 தோழர்கள் பெயர் இருக்கும் என்பது ஸஹீஹான ஹதீஸில் வந்து விட்டது. எனவே அந்த முன்னறிவிப்பு இன்று நிறைவேறிவிட்டது என்பதை எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும். கருணை புரியப்பட்ட இந்த சமுதாயத்தில் இதற்கு முன் மஹ்தி என்று வாதமும் புரிந்து தன்னுடைய காலத்தில் அச்சகமும் இருக்கக் கூடிய, 313 பெயர்களும் எழுதப்பட்டுள்ள ஒரு நூலும் தன்னிடம் இருக்கக்கூடிய எவரும் பிறக்கவில்லை.

இந்த வேலை மனிதனின் கட்டுப்பாட்டில் இருந்திருந்தால் இதற்கு முன் பல பொய்யர்கள் தன்னை இதற்கு உரியவராக ஆக்கியிருக்க முடியும் என்பது வெளிப்படையான விஷயம். ஆனால், உண்மை என்னவெனில், இறைவனின் முன்னறிவிப்புகளில் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட எத்தகைய நிபந்தனைகள் இருக்கும் என்றால், எந்தப் பொய்யராலும் அவற்றிலிருந்து பலன் பெற முடியாது. மேலும், உண்மையாளருக்கு வழங்கப்படும் அந்த வழிவகைகளும் காரணிகளும் அவருக்கு வழங்கப்படுவதில்லை.

அன்னார் கூறுகிறார்கள்: ஷேக் அலீ ஹம்ஸா பின் அலீ மலிக்குத் தூஸீ அவர்கள் ஹிஜ்ரீ 840-ம் ஆண்டு இயற்றப்பட்ட தமது நூல் ஜவாஹிருல் அஸ்ரார் -ல் வாக்களிக்கப்பட்ட மஹ்தி பற்றி கீழ்வரும் வாசகங்களை எழுதியுள்ளார்கள்: அதன் மொழியாக்கம் இதுவாகும்:

கத்ஆ எனும் பெயருடைய ஒரு கிராமத்தில் இருந்து மஹ்தி தோன்றுவார். உண்மையில், இந்தப் பெயரிலிருந்து காதியான் எனும் பெயர் வந்தது. பிறகு, கூறினார்: இறைவன் இந்த மஹ்தியை உண்மைப்படுத்துவான். தொலைதூரத்திலிருந்து அவருடைய தோழர்களை ஒன்று திரட்டுவான். அவர்களின் எண்ணிக்கை பத்ரில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருக்கும். அதாவது, 313 பேர் இருப்பார்கள். அவர்களின் பெயர்கள் அவர்களின் ஊர்களின் பெயர்களுடனும், பண்புகளுடனும் சேர்த்து அச்சிடப்பட்ட நூலில் பதியப்பட்டிருக்கும்.

இதற்கு முன் எவரும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாக வாதம் புரிந்து அவரிடம் அச்சிடப்பட்ட ஒரு நூலும் இருந்து, அதில் அவருடைய தோழர்களின் பெயரும் இருந்ததாக ஒரு விஷயம் நடக்கவில்லை என்பது இப்போது வெளிப்படையான விஷயம் ஆகும். ஆனால், நான் இதற்கு முன்னரும் ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலில் 313 பெயர்களை எழுதியிருக்கின்றேன். இப்போது மீண்டும் சான்றை முழுமைப்படுத்துவதற்காக 313 பெயர்களை நான் கீழே எழுதுகிறேன். அன்னார் ஸமீமா ரிஸாலா அஞ்சாமே ஆதம் என்ற நூலில் இதைக் குறிப்பிடுகின்றார்கள்:

இந்த முன்னறிவிப்பும் எனக்கே நிறைவேறியுள்ளது என்பதை ஒவ்வொரு நியாயமானவரும் புரிந்து கொள்ளட்டும்! ஹதீஸின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப முன்னரே இந்த விஷயத்தை எடுத்துக் கூற வேண்டியது அவசியம் ஆகும். அதாவது, இந்தத் தோழர்கள் அனைவரும் உண்மை மற்றும் தூய்மையான இயல்புடையவர்கள் ஆவார்கள். அல்லாஹ்வே அறிந்த தகுதிகளுக்கு ஏற்ப அன்பு கொள்ளுதல், உலகைத் துண்டித்துக் கொண்டு இறைவன் பக்கம் திரும்புதல் மற்றும் மார்க்கப் பணி மும்முரங்கள் ஆகியவற்றில் சிலர் சிலரை விட முந்திச் சென்று விட்டார்கள்.

இப்போது பாருங்கள்! இந்த நூலில் எழுதப்பட்டுள்ள இந்த 313 பேர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நபிமொழியில் காணப்படும் அந்த முன்னறிவிப்புக்கே உரியவர்கள் ஆவார்கள். முன்னறிவிப்பில் கத்ஆ என்ற சொல்லும் இருக்கிறது. அது காதியான் எனும் பெயரைத் தெள்ளத்தெளிவாக கூறுகிறது. எனவே இந்த ஹதீஸின் முழு கருத்து இதுவாகும்:

அந்த வாக்களிக்கப்பட்ட மஹ்தி காதியானில் பிறப்பார். அவரிடம் அச்சிடப்பட்ட ஒரு நூல் இருக்கும். அதில் அவருடைய 313 தோழர்களின் பெயர்கள் இருக்கும். எனவே இந்தக் காலத்திலிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் தோன்றி விட்ட அந்த நூல்களில், என்னுடைய கிராமமான காதியானின் பெயரை நான் எழுதிவிடுவது, எனது ஆதிக்கத்தில் இருக்கவில்லை என்பது ஒவ்வொருவரும் புரிய முடியும். நான் இந்த நோக்கத்திற்காக இந்தக் காலத்தில் அச்சகத்தைக் கண்டுபிடித்தேன் என்று நினைப்பதற்கு நான் அச்சகத்தின் கருவியையும் கண்டுபிடிக்கவில்லை ; பாகங்களையும் கண்டுபிடிக்கவில்லை. அச்சகத்தை நான் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை.

மேலும், கலப்பற்ற மக்களான 313 தோழர்களை உருவாக்குவது எனது

கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. மாறாக, இந்தக் காரணிகள் அனைத்தையும் தன் தூதர் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை நிறைவேற்றும் பொருட்டு அல்லாஹ்வே உருவாக்கினான்.

(ஸமீமா ரிஸாலா அஞ்சாமே ஆத்தம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 11, பக்கம் 324-325)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஆகிய இருவருக்கும் இடையிலான ஒப்புமையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனின் உண்மையான அடியார்கள் கண்ணியத்திற்குரிய மக்காவில் 13 ஆண்டுகள் வரை இஸ்ரவேலர்களைப் போன்று காஃபிர்களின் கைகளால் கடுமையான துன்பத்திற்கு ஆளாகியிருந்தார்கள். இந்தத் துன்பம் ஃபிர்அவ்ன் மூலம் இஸ்ரவேலர்களுக்கு ஏற்பட்ட அந்தத் துன்பத்தைக் காட்டிலும் மிக அதிகமானதாக இருந்தது. கடைசியில், இந்த உண்மையாளரான அடியார்கள் அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மையாளரான அடியார்கள் அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மையாளர்களுடன் இணைந்து அவனுடைய கட்டளையால் இஸ்ரவேலர்கள் எகிப்தில் இருந்து ஓடியது போன்றே மக்காவிலிருந்து ஓடினார்கள்.

பின்னர், ஃபிர்அவ்ன் தரப்பிலிருந்து இஸ்ரவேலர்களைக் கொல்வதற்காக அவர்கள் பின் தொடரப்பட்டது போன்றே மக்கத்தினர் இவர்களைக் கொல்வதற்காகப் பின்தொடர்ந்தனர். கடைசியில் அவர்கள் இந்தப் பின்தொடர்தலின் தீய விளைவால் ஃபிர்அவ்னும் அவனது படையும் நைல் நதியில் அழிந்தது போன்றே பத்ர்க் களத்தில் அழிந்தார்கள். இந்த இரகசியத்தைத் திறப்பதற்காகவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூஜஹ்ல் உடைய சடலத்தை பத்ரில் கொலையுண்டவர்களில் கண்டு இவன் இந்த சமுதாயத்தின் ஃபிர்அவ்னாக இருந்தான் என்று கூறினார்கள்.

சுருக்கமாக, ஃபிர்அவ்னும் அவனது படையும் நைல் நதியில் அழிந்தது பார்க்கப்பட்ட மற்றும் உணரப்பட்ட விஷயங்களில் ஒன்றாக இருந்தது. அதைப் பார்க்கவும் முடியும்; உணரவும் முடியும். அது நிகழ்ந்ததில் எவருக்கும் மறுப்பு இருக்க முடியாது. இதேபோன்று அபூஜஹ்ல் மற்றும் அவனது படையும் பின்தொடர்ந்த போது, பத்ர் யுத்தத்தில் அழிந்தது பார்க்கப்பட்ட மற்றும் உணரப்பட்ட விஷயங்களில் ஒன்றாக இருந்தது. அதை நிராகரிப்பது அறிவீனமும் பைத்தியக்காரத்தனமும் ஆகும்.

அந்த இஸ்ரவேலர்கள் அதாவது, அல்லாஹ்வின் அடியார்கள் எவர்களை நம் தலைவரும் எஜமானரும் ஆன இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கத்தினரின் அநீதியிலிருந்து காப்பாற்றினார்களோ அவர்கள் இஸ்ரவேலர்கள் எகிப்தின் நதியின் தலைமாட்டில் நின்று பாடியது போன்றே பத்ர் நிகழ்வுக்குப் பிறகு பாடலைப் பாடினார்கள். பத்ர்க் களத்தில் பாடப்பட்ட அந்த அரபுப் பாடல்கள் இப்போது வரை நூல்களில் பாதுகாப்பாக இருந்து வருகின்றன.

(அய்யாமுஸ் ஸுல்ஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 14, பக்கம் 290- 291)

பிறகு, ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அந்த ஒப்பானவர், எவரைப் பற்றி தவ்ராத்தின் இஸ்திஸ்னா அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதோ அவர் இறையாதரவு பெற்ற அதே நபிதான். அவர் தம் ஜமாஅத்துடன் தொடர்ந்து 13 ஆண்டுகள் துன்பத்தை சகித்துக் கொண்டு ஒவ்வொரு வகையான வேதனைகளையும் எதிர் கொண்டு விட்டு கடைசியில் தம் ஜமாஅத்துடன் ஓடினார். அவர் பின் தொடரப்பட்டார்.

கடைசியில், பத்ர் யுத்தத்தில் சில மணி நேரங்களில் தீர்மானமாகி எவ்வாறு நைல் நதியின் கூர்மையால் ஃபிர்அவ்னும் அவனது படையினரும் அழிந்து போனார்களோ அவ்வாறே அபூ ஜஹ்ல் மற்றும் அவனது படையினர் வாளின் கூர்மையால் கொல்லப்பட்டனர். பாருங்கள்! எகிப்திலும், மக்காவிலும் நைல் நதியிலும் பத்ர்க் களத்திலும் நடைபெற்ற நிகழ்வுகள் எவ்வளவு தூய்மையாகவும், பார்க்கப்பட்ட உணரப்பட்ட வகையிலும் ஒன்று மற்றொன்றுடன் ஒப்புமை கொண்டுள்ளன!

(அய்யாமுஸ் ஸுல்ஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 14, பக்கம் 292)

திருக்குர்ஆனில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

பத்ர் யுத்தத்தில் நீங்கள் எளியவராக இருந்தும் அல்லாஹ் நிச்சயமாக உங்களுக்கு உதவி புரிந்திருக்கின்றான்.

(ஆலி இம்ரான்: 124)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஒரு நூலான குத்பா இல்ஹாமியாவில் பத்ர் மற்றும் பதினான்காம் நூற்றாண்டின் ஓர் உன்னதமான ஒப்புமையைக் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

அதன் மொழியாக்கம் இதுவாகும்: அந்த நானூறு எண்ணிக்கை காத்தமுல் நபிய்யீன் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திற்குப் பிறகிலிருந்து ஆரம்பம் ஆகும். மார்க்கத்தின் வெற்றியைப் பற்றிய எந்த முன்னறிவிப்பு திறந்த மறையில் முன்னர் கூறப்பட்டு விட்டிருந்ததோ அது நிறைவேற வேண்டும் என்பதற்காக இது இருந்தது. அதாவது, இறைவனின் இந்தக் கூற்று ஆகும்:

لَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

எனவே பார்வை உள்ளவர்களைப் போன்று இந்த வசனத்தில் பார்வையை செலுத்துங்கள். ஏனெனில், இந்த வசனம் நிச்சயமாக இரண்டு பத்ரைக் குறிக்கிறது.

முதலாவது, முன்னவர்களின் வெற்றிக்காக நடந்த அந்த பத்ர் ஆகும். இரண்டாவது, பின்னவர்களுக்கு ஓர் அடையாளமாக இருக்கும் அந்த பத்ர் ஆகும். எனவே இந்த வசனம் எண்ணிக்கை அடிப்படையில் பத்ரின் இரவுக்கு ஒப்பான அந்தக் காலத்தைத் துல்லியமாகச் சுட்டிக் காட்டுகிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. மேலும், அந்த 400 ஆண்டுகள் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகுள்ளவையாகும். இதுவே உவமை வடிவில் இறைவனுடைய பார்வையில் பத்ர் இரவாகும்.

இவையனைத்தும் இருந்தும், அறிஞர்கள் அறிந்திருப்பது போன்று இந்த வசனத்திற்கு வேறு பொருள்களும் உள்ளன ; அவை கடந்த காலத்துடன் தொடர்புடையன என்பதையும் நாம் ஒப்புக் கொள்கிறோம். ஏனெனில், இந்த வசனத்திற்கு இரண்டு முகங்கள் இருக்கின்றன. உதவி இரண்டு உதவிகளாகும்; பத்ர் இரண்டு பத்ர்கள் ஆகும். ஒரு பத்ர் கடந்த காலத்தோடு தொடர்புடையது. இரண்டாவது பத்ர் எதிர்காலத்தோடு தொடர்புடையது. முஸ்லிம்களுக்கு இழிவு ஏற்படும் அந்தக் காலத்தோடு (தொடர்புடையது). நீங்கள் இந்தக் காலத்தில் பார்ப்பது போன்று இஸ்லாம் பிறையைப் போன்று ஆரம்பமானது. கடைசியில் இறுதி காலத்தில் இறைவனின் கட்டளையால் அது முழு நிலவாக ஆவது நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனவே எண்ணிக்கை அடிப்படையில் பத்ருடன் ஒத்துப் போகக் கூடிய இந்த நூற்றாண்டில் இஸ்லாம் பத்ரைப் போன்று (முழு நிலவைப்) போன்ற வடிவத்தைப் பெற வேண்டும் என்று இறைவனின் நுட்ப ஞானம் விரும்பியது. எனவே, இந்தப் பொருள்களையே இறைவனின் இந்தக் கூற்று சுட்டிக் காட்டுகிறது:

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

எனவே இந்த விஷயத்தில் ஆழமான பார்வையுடன் கவனம் செலுத்துங்கள். கவனமற்றவர்களைச் சேர்ந்தவர்களாகி விடாதீர்கள். ஐயமின்றி இங்கு

وَلَقَدْ نَصَرَكُمْ

எனும் சொற்கள் இரண்டாவது காரணத்தின் அடிப்படையில் யன்ஸுருக்கும் என்ற பொருளில் வந்துள்ளன. இது இறைஞானம் பெற்றவர்களுக்கு வெளிப்பட்டுள்ளது.

சுருக்கமாக, இறைவன் இஸ்லாத்திற்காக இரண்டு இழிவுகளுக்குப் பிறகு இரண்டு கண்ணியங்களை வைத்திருந்தான். யூதர்களுக்கு நேர்மாறாக, அதாவது அவர்களுக்கு தண்டனையாக இரண்டு கண்ணியங்களுக்குப் பிறகு இரண்டு இழிவுகளை நிர்ணயித்திருந்தான். இந்த தீயவர்கள் மற்றும் அநீதியிழைத்தவர்கள் பற்றிய கதையை நீங்கள் சூரா பனீ இஸ்ராயீல் படிக்கிறீர்கள். எனவே முஸ்லிம்களுக்கு முதல் இழிவு மக்காவில் ஏற்பட்ட போது இறைவன் அவர்களிடம்

اُذِنَ لِلَّذِيْنَ يُقٰتَلُوْنَ بِاَنَّهُمْ ظُلِمُوْا وَاِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ

என்ற தனது இந்தக் கூற்றில் வாக்குறுதி அளித்திருந்தான்:

عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ

என்ற கூற்றின் மூலம் நம்பிக்கை கொண்டவர்களின் கைகளால் நிராகரிப்பாளர்கள் மீது தண்டனை இறங்கும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இறைவனின் இந்த வாக்குறுதி பத்ர் யுத்தம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அன்று வெளிப்பட்டது. காஃபிர்கள் முஸ்லிம்களின் கூரான வாள்களால் கொல்லப்பட்டார்கள்.
(குத்பா இல்ஹாமியா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 16, பக்கம் 273 - 277)

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இப்பொழுது இந்தப் பதினான்காம் நூற்றாண்டில் பத்ர் யுத்தத்தில் பத்ர் சந்தர்ப்பத்தில் நிகழ்ந்துவிட்டிருந்த அதே நிலைதான் நடக்கிறது. அதற்காக அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّ اَنْتُمْ اَذِلَّةٌ

உண்மையில், இந்த வசனத்திலும் ஒரு முன்னறிவிப்பு அடங்கியிருந்தது. அதாவது, பதினான்காம் நூற்றாண்டில் இஸ்லாம் பலவீனமடைந்து ஆற்றல் அற்றதாக ஆகிவிடும் போது அப்போது அல்லாஹ் அந்தப் பாதுகாப்பு வாக்குறுதிக்கு ஏற்ப அதற்கு உதவி புரிவான்.
(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 280)

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இப்பொழுது பாருங்கள்! ஸஹாபிகளுக்கு பத்ரில் உதவி வழங்கப்பட்டது. மேலும், நீங்கள் குறைவானவர்களாக இருந்தபோது இந்த உதவி வழங்கப்பட்டது என்று கூறப்பட்டது. அந்தப் பத்ரில் நிராகரிப்பு முடிவுக்கு வந்தது.

பத்ர் எனும் சொல்லில் இதுபோன்ற மகத்துவ மிக்க அடையாளத்தின் வெளிப்பாட்டில் வருங்காலத்திற்காகவும் ஒரு செய்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும், பத்ர் பதினான்காம் நாள் நிலவுக்குக் கூறப்படுகிறது. இதன் மூலம் பதினான்காம் நூற்றாண்டில் அல்லாஹ்வின் உதவி வெளிப்படுவதன் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பதினான்காம் நூற்றாண்டு நன்மையையும், அருட்களையும் கொண்டு வரும் என்று பெண்கள் வரை எந்த நூற்றாண்டைப் பற்றி கூறி வந்தார்களோ இது அதே பதினான்காம் நூற்றாண்டு தான்.

இறைவனின் கூற்றுகள் நிறைவேறின. பதினான்காம் நூற்றாண்டில் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப அஹ்மத் எனும் பெயரின் பிரதிநிதி வெளிப்பட்டார். அது நானாவேன்.

அன்னார் (அலை) தம்மைப் பற்றி கூறுவார்கள்: எவர் பக்கம் இந்த பத்ர் நிகழ்வில் முன்னறிவிப்பு செய்யப்பட்டதோ, எவருக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸலாம் கூறினார்களோ அந்த அஹ்மத் எனும் பெயரின் பிரதிநிதி நானாவேன்.

ஆனால் அந்த நாள் வந்ததும் பதினான்காம் நிலவு உதித்ததும் அவர் கடைகட்டுபவர்; சுயநலவாதி என்று அழைக்கப்பட்டார் என்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும். பார்த்தும் பார்க்காதவர்கள் மீது நேரத்தைப் பார்த்தும் அடையாளம் காணாதவர்கள் மீது அந்தோ பரிதாபம்! பதினான்காம் நூற்றாண்டில் இது நடக்கும்

## நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

என்று சொற்பொழிவு மேடை மேல் ஏறி ஏறி அழுதவர்கள் எல்லாம் மரணித்து விட்டார்கள். இப்போது சொற்பொழிவு மேடை மேல் ஏறி வந்திருப்பவர் பொய்யர் ஆவார் என்று கூறுபவர்கள் எஞ்சியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன ஆகிவிட்டது? அவர்கள் ஏன் பார்ப்பதில்லை? ஏன் சிந்திப்பதில்லை?

அப்போதும் அல்லாஹ் பத்ரிலேயே உதவி புரிந்தான். அந்த உதவி எளியவர்களுக்கான உதவியாக இருந்தது. அப்போது வெறும் 313 பேர் போர்க் களத்தில் வந்தார்கள். மொத்தம் கம்பால் செய்யப்பட்ட இரண்டு மூன்று வாள்கள் இருந்தன. மேலும், அந்த 313 பேரில் பெரும்பாலானவர்கள் சிறியவர்களாக இருந்தார்கள். இதைவிட பலவீனமான நிலை என்னவாக இருக்கும்? மறுபுறம் ஒரு மிகப் பெரிய கூட்டம் இருந்தது. அவர்கள் எல்லாரும் தேர்ந்தெடுக்கப்பட்ட போர்த் திறமை பெற்றவர்களாகவும் பெரும்பெரும் இளைஞர்களாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பக்கம் வெளிப்படையான பொருள்கள் ஏதும் இருக்கவில்லை. அந்த நேரத்தில் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் தம் இடத்தில் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ اِنْ اَهْلَكْتَ هٰذِهِ الْعِصَابَةَ لَنْ تُعْبَدَ فِي الْاَرْضِ اَبَدًا۔

அதாவது, அல்லாஹ்வே! இன்று நீ இந்த ஜமாஅத்தை அழித்து விட்டால், பிறகு உன்னை வணங்குபவர் எவரும் இருக்க மாட்டார்.

கேளுங்கள்! நிச்சயமாக நானும் இதே போன்று கூறுகிறேன். இன்று அதே பத்ர் விவகாரமாகும். அல்லாஹ் அதேபோன்று ஒரு ஜமாஅத்தைத் தயார்படுத்துகிறான். அதே பத்ர் மற்றும் அஸில்லத்துன் எனும் சொற்கள் இருக்கின்றன.
(மல்ஃபூஸாத் , தொகுதி 2, பக்கம் 190 - 191- காதியான் பதிப்பு 1984)

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: பதினான்கு எனும் எண்ணிக்கைக்குப் பெரும் பொருத்தம் இருக்கிறது. பதினான்காம் நாள் நிலவு முழுமையானதாக இருக்கும். இதன் பக்கமே அல்லாஹ் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டியுள்ளான்:

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّ اَنْتُمْ اَذِلَّةٌ

அதாவது, ஒன்று அந்த பத்ராக இருந்தது; அதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதிரிகள் மீது வெற்றி பெற்றார்கள். அப்போதும் அன்னாருடைய ஜமாஅத் குறைவானதாக இருந்தது. மற்றொன்று இந்த பத்ராகும். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலம் ஆகும்.

பத்ர் யுத்தத்தின் கதையை மறக்காதீர்கள் என்ற இறையறிவிப்புப் பற்றி ஹஸ்ரத் காஸீ அப்துல் கரீம் ஸாஹிப் அவர்கள் 1904-ம் ஆண்டு பிப்ரவரி 17-ம்தேதி தமது டைரியில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

இன்று இரவு ஹஸ்ரத் (அலை) அவர்கள் கனவில் கூறினார்கள்: பத்ர் யுத்தத்தின் கதையை மறக்காதீர்கள் என்று ஒருவர் கூறினார்.
(தத்கிரா, பக்கம் 688 - நான்காம் பதிப்பு 2004-ம் ஆண்டு)

அல்லாஹ் நமக்குக் குறிப்பாக, பத்ர் யுத்தத்தின் முக்கியத்துவம் மற்றும் புரிதலை வழங்குவானாக! நாம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரின் வருகையின் நோக்கத்தைப் புரிபவர்களாக இருப்போமாக! முஸ்லிம் சமுதாயமும் இந்த பத்ர் நிகழ்வின் உண்மைத்துவத்தைப் புரியட்டுமாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்துள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அடையாளம் காணட்டுமாக! இவ்வாறு இந்த முஸ்லிம்கள் தாம் இழந்த அந்த மகத்துவத்தை மீண்டும் பெறுவார்களாக!

இப்போது நான் ஆண்டு மாநாடு பற்றி சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். அடுத்த ஜுமுஆவிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் யூ.கேவின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. இன்ஷாஅல்லாஹ். இவ்வாண்டு ஏறக்குறைய மூன்று நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளியில் இருந்தும் பெரும் எண்ணிக்கையில் விருந்தினர்கள் வருவார்கள். இன்ஷா அல்லாஹ். இன்னும் சொல்வதாயின், விருந்தினர்களின் வருகை ஆரம்பித்துவிட்டது. அல்லாஹ் அவர்கள் அனைவரின், பயணம் செய்து வரும் அவர்கள் அனைவரின் பயணங்களிலும் எளிமையை ஏற்படுத்தி விடுவானாக! அனைவரும் இங்கு பாதுகாப்பாக வந்து சேர்வார்களாக! ஜல்ஸாவின் நோக்கத்திலிருந்து உண்மையான உணர்வு மற்றும் உயிரோட்டத்துடன் ஜல்ஸாவில் கலந்து கொள்வார்களாக!

நாம் ஜல்ஸாவின் நாட்களில் ஆன்மிக உணவுத் தட்டைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற விஷயம் மட்டுமே முன்னிருக்கட்டுமாக! இதேபோன்று ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினராகக் கருதி தொண்டாற்றுவதற்கு ஜல்ஸாவின் பல்வேறு பணிகளில் நியமிக்கப்பட்டுள்ள அனைத்து பணியாளர்களும் முயற்சி செய்யுங்கள். இம்முறை ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக, நிர்வாக ரீதியாக சில இடங்களில் சில குறைகள் எஞ்சியிருந்து விடலாம்.

பொதுவாக எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மாஷா அல்லாஹ். யூ.கே ஜமாஅத்தின் ஜல்ஸா நிச்சயம் இப்போது எவ்வளவு அனுபவம் வாய்ந்ததாக ஆகிவிட்டது என்றால், பெரும்பாலான பிரச்சனைகளுக்கு அவர்கள் தீர்வு கண்டிருப்பார்கள். குறைகள் இருந்தால் மிகவும் சாதாரணமான விஷயங்களாகத் தான் இருக்கும். பிரச்சனை ஏதும் வந்தாலும் அதை இவர்களால் சிறந்த முறையில் தீர்க்க முடியும். விருந்தினர்களுக்கு எந்த விதத்திலும் துன்பம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும் அப்படிப்பட்ட பிரச்சனைகளை அல்லாஹ் வராமலேயே இருக்கச் செய்வானாக!

இஸ்லாமோ விருந்தினர்களுக்கு மதிப்பும் கண்ணியமும் அளிக்க வேண்டும் என்று மிகவும் வலியுறுத்திக் கூறுகிறது. பிறகு, எந்த விருந்தினர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழைத்ததனால் மார்க்க நோக்கத்திற்காக மட்டுமே வருகிறார்களோ அவர்களுக்கோ எல்லாப் பணியாளர்களும் விருந்து

உபசரிப்பவர்களும், தூய்மையான முறையில் தியாகம் செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் குறிப்பாக மதிப்பும், கண்ணியமும் அளிக்க வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியை நாடியவாறு இந்தத் தொண்டை ஆற்ற வேண்டும்.

விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்வது பற்றிய இஸ்லாமிய போதனை என்ன? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மிடம் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவது குறித்து என்ன எதிர்பார்ப்பு வைத்திருக்கிறார்கள்? இது சம்பந்தமாக ஹுஸுர் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

எவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்கிறாரோ அவர் தன் விருந்தினருக்கு கண்ணியமளிக்கட்டும்!

ஜல்ஸாவின் நாட்களிலோ பல்வேறு சமுதாயங்கள் மற்றும் பல்வேறு இயல்புகளை உடைய மக்கள் வருகிறார்கள். சிலநேரங்களில் எவ்வாறு அவர்களது இயல்புக்கு ஏற்ப அவர்களை கவனித்துக் கொள்வது என்பது சிரமமாகி விடுகின்றது. சிலவேளை விருந்தினர் தன் இயல்பின் காரணமாக எத்தகைய விஷயங்களைப் பேசிவிடுகிறார் என்றால் அல்லது எப்படி வெளிப்படுத்தி விடுகிறார் என்றால், அது பணிபுரிபவர்களுக்கு அல்லது தொண்டாற்றுபவர்களுக்கு பிடிப்பதில்லை. ஆனால், நமக்கு அல்லாஹ்வின் தூதரின் கட்டளை இதுதான்:

நீங்கள் எல்லா சூழ்நிலையிலும் விருந்தினர்களுக்கு கண்ணியம் அளிக்க வேண்டும். ஏனெனில், அதன் மூலமாகவும் உங்களுடைய ஈமானின் தரம் மதிப்பிடப்படும்.

எனவே இந்த விஷயத்தை மிகவும் கருத்தில் கொள்ளுங்கள். பணிபுரிபவர்கள் எப்போதும் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த வேண்டும். புன்சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும். தொண்டாற்றுபவர்கள் தாங்களே தங்கள் விருப்பத்துடன் தம்மை விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதற்காக சமர்பித்துள்ளார்கள்.

பிறகு, அல்லாஹ்வும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களும் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்தத் தரத்தையும் பெறுங்கள். நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துவதற்காக எந்தத் தரங்களைப் பெறுவதற்கு இஸ்லாம் நமக்கு வலியுறுத்துகிறது என்பது பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

உன் சகோதரனுக்கு முன்னால் நீ புன்சிரிப்பது உனக்கு ஸதக்காவாகும். நீ நல்ல விஷயங்களைப் பேசுமாறு வலியுறுத்துவதும் தீய விஷயங்களை விட்டுத் தடுப்பதும் உனக்கு ஸதக்காவாகும். வழிதவறிய ஒருவருக்கு வழிகாட்டுவதும் பார்வையற்றவருக்கு வழிகாட்டுவதும் உனக்கு ஸதக்காவாகும். கல், முள், எலும்பு போன்றவற்றை வழியிலிருந்து அகற்றுவதுமே உனக்கு ஸதக்காவாகும். அதாவது, ஒவ்வோர் அசுத்தத்தையும் அகற்றுதல், உன்னுடைய வாளியிலிருந்து உன் சகோதரன் உடைய வாளியில் ஏதாவது போட்டு விடுவதும் உனக்கு ஸதக்காவாகும்.

எனவே இந்தத் தரம்தான் ஒவ்வோர் அஹ்மதியிடமும் இருக்க வேண்டும். ஏனெனில், நான் இப்போது ஊழியர்களுக்கும் கவனமூட்டுகிறேன். எனவே அவர்களிடம் குறிப்பாக கூறுகிறேன். எப்பொழுதும் புன்சிரித்துக் கொண்டே இருப்பது ஒரு மிகப் பெரும் பண்பாகும். பணிகளின்போது சிலநேரம் உறங்குவதற்குக் குறைவான நேரம் கிடைக்கிறது. களைப்பும் ஏற்பட்டு விடுகிறது. ஆனால், இப்படிப்பட்ட நிலையிலும் நீங்கள் புன்சிரித்துக் கொண்டே இருங்கள்; மன மகிழ்ச்சியுடன் தொண்டாற்றுங்கள் என்பதே கட்டளையாகும்.

பிறகு, தர்பிய்யத் துறை குறிப்பாகவும், பொதுவாக பணியாற்றுபவர்கள் (அனைவரும்) பொதுவாகவும் இந்த விஷயத்தை கருத்திற் கொள்ள வேண்டும். நம்முடைய சூழலின் புனிதத்தன்மைக்கும் போதனைக்கும் எதிராக ஏதாவது ஒரு தவறான விஷயத்தை யாரிடமாவது கண்டால் மென்மையாகவும், அன்புடனும் புரிய வையுங்கள்.

பிறகு, அடுத்து வழிகளைத் தூய்மையாக வைத்திருப்பது பற்றி வழிகாட்டுவது பற்றி கூறியுள்ளார்கள். வழிகளைக் காட்டுவதற்காகவும் அணிகள் நிர்ணயிக்கப்படுவதுண்டு. இதே போன்று பல்வேறு இடங்களில் போர்டுகளும் வைக்கப்பட்டிருக்கும். அவற்றில் வழிகாட்டல்களும் வைக்கப்பட்டிருக்கும். இடங்களின் அடையாளக் குறிகளும் இடப்பட்டிருக்கும். ஆனால், பிறகும் பணி புரியும் யாரிடமாவது யாராவது ஒருவர் வழிகேட்டால் அவருக்கு வழிகாட்டுங்கள். யாருக்கு அதற்கான வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் மட்டும்தான் கூற வேண்டும் என்பதல்ல. யாருக்காவது வழி தெரியும் என்றால், அந்த ஒவ்வொருவரும் வழிகாட்ட வேண்டும். இதுதான் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது ஆகும்.

உங்களுக்குத் தெரியவில்லை என்றால், சம்பந்தப்பட்ட துறை வரை கொண்டு சேர்த்து விடுங்கள். அடுத்து, இயலாதவர்களுக்கும் பார்வையற்றவர்களுக்கும் உதவி செய்வதோ இயல்பாகவே அவசியம் ஆகும். அது ஒவ்வொருவருக்கும் தெரியும். இங்கு அதன்பால் கவனமூட்டவும் படுகிறது. எனவே, இது தொடர்பாக அதிகம் கூற வேண்டிய தேவையில்லை.

பிறகு, வழிகளிலும் பல்வேறு இடங்களிலும் யாராவது ஒரு விருந்தினர் அல்லது யாராவது ஒரு நபர் ஏதாவது கவர் அல்லது டிஸ்போஸிபில் க்ளாஸ் போன்றவற்றை அல்லது இதுபோன்ற வேறு ஏதாவது பொருளை அல்லது அசுத்தத்தை வீசிச் சென்றால் துப்புரவு துறை இதன் பக்கம் கவனம் செலுத்தும்தான்; தூய்மைபடுத்திக் கொண்டே இருக்கத்தான் செய்யும்.

ஆனால், எந்த ஓர் ஊழியரும் இதுபோன்ற அசுத்தம் எதையும் பார்த்தால், தானே எடுத்து அருகில் இருக்கும் குப்பைத் தொட்டியில் போட்டு விட வேண்டும். நிர்வாகமும் பல்வேறு இடங்களில் அருகருகே குப்பைத் தொட்டிகளை வைக்க வேண்டும். ஆனால், அத்துடன் நிலைமைகள் இப்படி இருக்கின்றன என்பதால் யாராவது ஏதாவது தவறான பொருளை அதில் வீசி விடாத வண்ணம் நிர்வாகம் கண்காணிக்கவும் வேண்டும்.

அதேபோன்று உணவு பரிமாறும் மக்கள் அவற்றிலும் விருந்தினர்களை அதிகம் கருத்தில் கொள்ள வேண்டும். எப்போதாவது, உணவில் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டால் இந்தத் தட்டுப்பாடு காரணமாக பகிர்ந்து உண்ணுங்கள். அப்போதுதான் எல்லாருக்கும் ஏதாவது கிடைக்கும் என்று அன்போடு விருந்தினர்களுக்குப் புரிய வையுங்கள். பொதுவாக இதற்கான சாத்தியம் குறைவாக இருக்கும்.

ஆனால், ஒருவேளை எப்போதாவது இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகி விட்டால் உணவு பரிமாறுபவர்கள் மிகவும் அன்போடும் நுட்பத்தோடும் இந்த விவகாரத்தை அணுக வேண்டும். இதே போன்று டிராஃபிக் துறை இருக்கிறது. இங்கும் சில நேரங்களில் மோசமான மனநிலைகள் உருவாகி விடுகின்றன. குறிப்பாக, பருவ நிலை சீர்கெட்டிருக்கும் போது இங்கு நான் இது சம்பந்தமாக வரும் விருந்தினர்களிடமும் இந்த டிராஃபிக் பணியாளர்களுடன் ஒத்துழைப்பு கொடுங்கள் என்று கூறுவேன்.

அதேவேளையில் இந்தத் துறையின் பணியாளர்களும் எப்பொழுதும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துங்கள்.

இதேபோன்று ஜல்ஸாவின் மற்ற பல்வேறு துறைகள் உள்ளன. ஒவ்வொருவரும் எப்பொழுதும் புன்சிரித்துக் கொண்டே இருங்கள் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கட்டளைபடி செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ் எல்லாப் பணியாளர்களையும் சிறப்பான முறையில் தம்முடைய பணிகளை நிறைவேற்றச் செய்வானாக!

ஆண்டு மாநாடு எல்லா விதத்திலும் அருளுக்குரியதாக அமையட்டுமாக! குறிப்பாக, இந்த ஜல்ஸாவின் வெற்றிக்காக ஒவ்வோர் அஹ்மதியும் துஆக்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ், நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

**மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)**

உலகில் மனிதனுக்கு கிடைக்கின்ற சொர்க்கம் என்பது قَدۡ اَفۡلَحَ مَنۡ زَكّٰىهَا (தனது உள்ளத்தை தூய்மைப்படுத்திக் கொண்ட நம்பிக்கையாளர் வெற்றி பெற்றுவிட்டார்-அஷ்ஷம்ஸ்: 10) என்பதன் மீது அமல் செய்வதால் கிடைக்கின்ற சொர்க்கம் ஆகும். மனிதன் இறைவணக்கத்தின் அசல் பொருளையும், சாறையும் பெற்று விடும்போது பின்னர் இறைவனின் அருட்கொடைகள் மற்றும் கண்ணியங்களின் தூய தொடர் ஆரம்பமாகிவிடுகின்றது. மேலும், எதிர்காலத்தில் மரணத்திற்கு பிறகு வெளிப்படையாகவும், கண்கூடாகவும், உணரக் கூடிய வகையிலும் கிடைக்கக் கூடிய அருட்கொடைகளை தற்போது ஆன்மிக வடிவில் அவர் பெறுவார்.

எனவே நினைவிற் கொள்ளுங்கள்! சொர்க்க வாழ்க்கை இவ்வுலகிலிருந்தே துவங்கிவிடாத வரை மேலும், இவ்வுலகில் அதன் இன்பத்தை சுவைக்காத வரை திருப்தியும் கொள்ளாதீர்கள்; நிம்மதியும் அடையாதீர்கள். ஏனெனில் எவர் இவ்வுலகில் எதனையும் பெறுவதில்லையோ மேலும் எதிர்காலத்தில் சொர்க்கத்திற்கான நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் வீணான ஆசை கொள்கின்றார். உண்மையில்,

وَمَنۡ كَانَ فِىۡ هٰذِهٖۤ اَعۡمٰى فَهُوَ فِى الۡاٰخِرَةِ اَعۡمٰى وَاَضَلُّ سَبِيۡلًا ﴿۷۳﴾

(எவர் இவ்வுலகில் குருடராக இருப்பாரோ அவர் மறுவுலகிலும் குருடராகவே இருப்பார்-(17:73)) என்பதை அவர் உண்மைப்படுத்தக் கூடியவர் ஆவார். எனவே அல்லாஹ்வைத் தவிர்த்து மற்ற அனைத்து கூழாங்கற்களையும், பாறைகளையும் உள்ளத்தின் நிலத்திலிருந்து அகற்றி விடாத வரையிலும், அதனை கண்ணாடியைப் போன்று தூய்மையாகவும்,கண் மையைப் போன்று மெல்லியதாகவும் ஆக்கிக் கொள்ளாத வரையிலும் நிம்மதியாக இருக்காதீர்கள். (மல்ஃபூஸாத் தொகுதி1,பக்கம்472, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

**தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)**

தொழுகைக்கான நேரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

1) مَالَتْ وَزَالَتْ عَنْ كَبِدِ السَّمَآءِ

அதாவது, ஸவால் என்பதை துலூக் என்று கூறுவர். இதில் லுஹர் தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது. (2)

اِصْفَرَّتْ

சூரியன் மஞ்சள் நிறமாகிவிடும்போது அதனையும் துலூக் என்று கூறுவர். இதில் அஸர் தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது. (3) மூன்றாவது பொருள் சூரியனின் மறைவு ஆகும். இதில் மஹ்ரிப் தொழுகைக்கான நேரம் கூறப்பட்டுள்ளது. (4)

غَسَقِ الَّيْلِ

என்பதன் பொருள்

ظُلْمَةُ اَوَّلِ اللَّيْلِ

ஆகும்.அதாவது இரவின் ஆரம்பப் பகுதியின் இருள். இதில் இஷா தொழுகைக்கான நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5) وَقُرۡاٰنَ الۡفَجۡرِ

என்று கூறி ஸுபுஹ் தொழுகைக்கான கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இதனை தவிர வேறு எந்த காலை திலாவத்திற்கான நேரமும் கடமை கிடையாது.

اِنَّ قُرۡاٰنَ الۡفَجۡرِ كَانَ مَشۡهُوۡدًا ﴿۷۹﴾

ஹதீஸில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸுபுஹ் தொழுகைக்கான நேரத்தில் பகல் நேரத்து வானவர்கள் வருகின்றனர். மேலும், இரவு நேரத்து வானவர்கள் சென்று விடுகின்றனர். அந்த வானவர்கள் இறைவனிடம் செல்கின்றபோது, அவர்களிடம் விசாரிக்கப்படும் போது அவர்கள் இவ்வாறு கூறுவர்: நாங்கள் உலகில் சென்ற போது, உன்னுடைய அடியார்களை தொழுதவாறே கண்டோம். மேலும், நாங்கள் திரும்பி வரும்போதும் அவர்கள் தொழுது கொண்டிருந்த நிலையிலேயே அவர்களை விட்டு வந்துள்ளோம்.

عَنْ اَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ تَشْهَدُهُ مَلَائِكَةُ اللَّيْلِ وَمَلَائِكَةُ النَّهَارِ

(அல் ஹதீஸ்)

(இதன் பொருள் இவ்வாறாகும்: ஸுபுஹ் தொழுகை குறிப்பாக அல்லாஹ்விற்கு முன்னால் சமர்ப்பிக்கப்படுகின்றது.மேலும் சிறப்பான வகையில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஏனெனில், மனிதன் அந்நேரத்தில் சுகமான தூக்கத்தை விட்டு விட்டு எழுகின்றான். ஸுபுஹ் தொழுகை உண்மையில் சாதாரண முஸ்லிம்களுக்கு தஹஜ்ஜுத் தொழுகையாகும். சந்தேகத்திற்கு இடமின்றி, எந்த மனிதர் ஸுபுஹ் தொழுகையை தொழுவாரோ அவர் அந்த தொழுகையை ஈமானிய நிலையில் தொழுது இருந்தால் பின்னர் ஏனைய தொழுகைகளும் அவருக்கு எளிதாகிவிடும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 373, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

**********

**குத்பா பேருரை....(12ம் பக்க தொடர்ச்சி)**

போர் செல்வங்களின் பங்கீட்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் ஷஹீது ஆகியிருந்தவர்களின் வாரிசுகளுக்கு அந்த ஷஹீதுகளுக்குரிய பங்கை வழங்கினார்கள். மேலும், அதேபோன்று மதீனாவில் துணை பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அல்லது எவர்களிடம் பல்வேறு டியூட்டிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தனவோ மேலும், எவர்களால் அதன் காரணமாக பத்ர் போரில் பங்கு பெற முடியாமல் போனதோ அத்தகைய மக்களுக்கும் அவர்களுக்குரிய பங்கு கொடுக்கப்பட்டது.

(கஸ்வாதுன் நபி (ஸல்)- நூலாசிரியர் -அல்லாமா ஹலபி, உருது மொழியாக்கம், பக்கம் 143 -144, தாருல் இஷாஅத் காராச்சி)

பத்ர் போர் கைதிகளிடமிருந்து ஈட்டுத் தொகை மற்றும் ஸஹாபிகளின் கருத்துகள் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

பத்ர் போர் கைதிகளிடமிருந்து ஈட்டுத் தொகை பெறப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். ஈட்டுத் தொகையின் அளவு நான்காயிரம் முதல் ஆயிரம் தர்ஹம் வரை இருந்தது. ஆயினும், எவர்களால் ஈட்டுத் தொகை கொடுக்க முடியாமல் இருந்ததோ அவர்களுக்கு இந்த நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது: அதாவது, அவர்கள் மதீனாவின் பிள்ளைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். அதேபோன்று சில கைதிகள் குறைவான ஈட்டுத் தொகை அல்லது எந்த ஈட்டுத் தொகையுமே இல்லாமலும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப். எம். ஏ அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல், பக்கம் 368 -369)

ஈட்டுத் தொகை தொடர்பான அறிவிப்புகள் பல்வேறு வகையான அறிவிப்புகளாக உள்ளன. எவ்வாறு இருப்பினும், முதலில் அனைத்து விஷயங்களையும் எடுத்துரைத்து விடுகின்றேன். வரலாறு மற்றும் ஸீரத் நூல்களில் இன்னும் கூறப்போனால் ஹதீஸ் நூல்களில் இடம் பெற்றுள்ள ஈட்டுத் தொகை பெறுவது தொடர்பான அறிவிப்புகளில் இந்த அறிவிப்புகளும் கலந்து சேர்ந்து விட்டன.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....

தமிழாக்கம்
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**********




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

# ஜுமுஆ பேருரை

## பத்ர் போரின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாறு

**இன்ன இன்ன நபர்களின் மகன்களே! இன்ன இன்ன நபர்களின் மகன்களே! உங்களுக்கு இந்த விஷயத்தால் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதா? நீங்கள் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டுமே! ஏனெனில் எங்கள் இறைவன் எங்களிடம் செய்திருந்த வாக்குறுதியை நாங்கள் உண்மையானதாகக் கண்டு கொண்டோம். உங்கள் இறைவன் உங்களிடம் செய்த வாக்குறுதியை உண்மையானதாக நீங்கள் கண்டு கொண்டீர்களா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

**இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த இறைவனின் கையில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் கூறுகின்ற இந்த விஷயங்களை (பத்ர் போரில் கொலையுண்ட) இவர்கள் உங்களை விட நன்றாக கேட்டுக் கொண்டிருக்கின்றனர்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 ஜுலை 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **14ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி........**

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) கூறிவந்தார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உயிரற்ற இந்த சடலங்களுடன் தாங்கள் என்ன பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்?; இவர்கள் மரணித்தவர்கள் அல்லவா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த இறைவனின் கையில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் கூறுகின்ற விஷயங்களை உங்களை விட அவர்கள் நன்றாக செவிமடுக்கின்றார்கள். (புகாரி, கிதாபுல் மகாஸீ, பாப்- கத்ல் அபீ ஜஹ்ல், ஹதீஸ் எண்: 3976)

ஸீரத் இப்னு ஹிஷ்ஷாமில் இவ்வாறு குறிப்பு வருகின்றது: கிணற்று வாசிகளே! நீங்கள் உங்களது நபியின் மிகவும் தீய உறவினர்களாக இருந்தீர்கள். நீங்கள் என்னை பொய்ப்படுத்தினீர்கள். மக்கள் என்னை உண்மைப்படுத்தினர். நீங்கள் என்னை எனது வீட்டிலிருந்து வெளியேற்றினீர்கள். மேலும், மக்கள் எனக்கு அடைக்கலம் கொடுத்தனர். நீங்கள் என்னுடன் போர் புரிந்தீர்கள். மக்கள் எனக்கு உதவி செய்தனர். பின்னர்,

هَلْ وَجَدْتُّمْ مَا وَعَدَ كُمْ رَبُّكُمْ حَقًّا

என்று கூறினார்கள்: பொருள்: உங்களுடன் உங்களது இறைவன் செய்திருந்த வாக்குறுதியை நீங்கள் உண்மையுடன் பெற்றுக் கொண்டீர்களா?

(ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 435, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2001)

ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இந்த சம்பவத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

எந்தக் குழிகளில் குறைஷிய தலைவர்கள் புதைக்கப்பட்டிருந்தார்களோ அந்தக் குழிகளுக்கு அருகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (மதீனா) திரும்புவதற்கு முன்னர் சென்றார்கள். பின்னர், அவர்களில் ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு விளித்தார்கள். மேலும், கூறினார்கள்:

هَلْ وَجَدْتُّمْ مَا وَعَدَ كُمُ اللهُ حَقًّا فَاِنِّيْ وَجَدْتُّ مَا وَعَدَنِيَ اللهُ حَقًّا

பொருள்: இறைவன் என் மூலமாக உங்களிடம் செய்த வாக்குறுதியை நீங்கள் உண்மையானதாக கண்டு கொண்டீர்களா? இறைவன் என்னுடன் செய்திருந்த அந்த வாக்குறுதியை நான் உண்மையானதாகக் கண்டு கொண்டேன்.மேலும், அன்னார் (ஸல்) கூறினார்கள்:

يَا اَهلَ الْقَلِيْبِ بِئْسَ عَشِيْرَةِ النَّبِيِّ كُنْتُمْ لِنَبِيِّكُمْ كَذَّبْتُمُوْنِيْ

وَصَدَقَنِيَ النَّاسُ وَاَخْرَجْتُمُوْنِيْ وَآوَانِيَ النَّاسُ وَقَاتَلْتُمُوْنِيْ وَنَصَرَنِيَ النَّاسُ

பொருள்: குழிகளில் வீழ்ந்து கிடப்பவர்களே! நீங்கள் உங்களது நபியின் தீய உறவினர்கள் ஆவீர்கள். நீங்கள் என்னை பொய்ப்படுத்தினீர்கள். ஏனைய மக்கள் என்னை உண்மைப்படுத்தினர். நீங்கள் என்னை நாட்டை விட்டு வெளியேற்றினீர்கள். ஏனைய மக்கள் எனக்கு அடைக்கலம் வழங்கினர். நீங்கள் எனக்கு எதிராக போர் புரிந்தீர்கள். மேலும் ஏனைய மக்கள் எனக்கு உதவி செய்தனர்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர்களோ தற்போது மரணித்தவர்கள் ஆவர்; அவர்கள் என்ன செவிமடுப்பர்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, எனது இந்த கூற்றுகளை உங்களை விடவும் தற்போது அவர்கள் மிகவும் நன்றாக செவிமடுக்கின்றனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அதாவது, அவர்கள் அனைத்து உண்மைகளும் தெளிவாகிவிட்ட உலகத்தை அடைந்து விட்டார்கள்.

மேலே பதியப்பட்டுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வார்த்தைகள், அதாவது தற்போது எடுத்துரைக்கப்பட்டுள்ள அந்த சொற்கள் தன்னுள் ஒரு விநோதமான வலி மற்றும் வேதனையைக் கொண்டுள்ளன. அவற்றிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டிருந்த உள்ளத்தின் நிலைமைகளை ஓரளவு அனுமானித்துக் கொள்ள முடியும். அந்ரேத்தில் குறைஷியர்களின் முந்தைய கால எதிர்ப்பின் வரலாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களுக்கு முன்னால் இருந்தது என்று அந்த சொற்களிலிருந்து தெரிய வருகிறது. அன்னார் (ஸல்) எண்ண ஓட்டங்களில் அதன் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டிக் கொண்டிருந்தார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளம் அந்த பக்கங்களை படித்ததன் காரணமாக நிம்மதியிழந்து இருந்தது. அன்னாருடைய இந்த சொற்கள் இந்த விஷயத்திற்கு உறுதியான சான்றுகளாக இருக்கின்றன. அதாவது, இந்த போருக்கான தொடரை ஆரம்பித்து வைத்ததற்கான முழு முதற் பொறுப்பு மக்கத்து காஃபிர்களுடையதாக இருந்தது. அதனை அன்னார் (ஸல்) 'قَاتَلْتُمُوْنِيْ وَنَصَرَنِيَ النَّاسُ' என்ற சொற்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். பொருள்: எனது சமுதாயத்தின் மக்களே! நீங்கள் என்னுடன் போர் புரிந்தீர்கள். மேலும், ஏனைய மக்கள் எனக்கு உதவி செய்தனர்.

குறைந்தபட்சம் இந்த சொற்களிலிருந்து இந்த விஷயம் நிச்சயம் நிரூபணமாகின்றது. அதாவது, இந்தப் போர்களுக்கான துவக்கம் நிராகரிப்பார்களின் புறமிருந்தே நிகழ்ந்தது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். மேலும், நிர்பந்தத்திற்கு ஆளாகி தற்காப்புக்காக மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாள் ஏந்தினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம். ஏ -ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 364 -365)

இந்தப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களைப் பற்றிய குறிப்பும் உள்ளது. அவற்றில் ஒரு சம்பவம் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இவ்வாறு கிடைக்கின்றது.

இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்: உக்காஷா பின் மிஹ்ஸன் (ரலி) அவர்கள் பத்ர் போர் நாளன்று தமது வாளுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்; எதுவரை என்றால், அது அன்னாரின் கரங்களில் உடைந்து விட்டது. அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஒரு மரத் தடியை அன்னாருக்கு வழங்கினார்கள். மேலும், உக்காஷாவே! நீர் இதனைக் கொண்டு காஃபிர்களுடன் போர் புரிவீராக! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். உக்காஷா (ரலி) அவர்கள் அதனை கைகளில் ஏந்தி வீசினார்கள். அப்போது அது அன்னாரின் கரங்களில் வாளாக மாறிவிட்டது. அது மிகவும் நீளமானதாக இருந்தது. அதன் இரும்பு மிகவும் கடினமானதாக இருந்தது. மேலும், அதன் நிறம் வெண்மையாக இருந்தது. அன்னார் (ரலி) அதனுடன் போர் புரிந்து கொண்டே சென்றார்கள். எதுவரை என்றால் முஸ்லிம்களுக்கு அல்லாஹ்

வெற்றியை வழங்கிவிட்டான்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அந்த வாளின் பெயர் அவன் ஆகும். பிறகு நடைபெற்ற போர்களிலும் அன்னார் (ரலி) அந்த வாளுடன் வீரமுடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால் முஸைலமா பின் கஸ்ஸாபுடனான போரில் அன்னார் (ரலி) ஷஹீது ஆனார்கள். (ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 434, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்-2001)

அடுத்து, ஓர் அற்புதத்தின் வடிவில் உமிழ் நீர் மற்றும் புனிதக் கரங்களின் தாக்கங்களைப் பற்றிய குறிப்புகளும் கிடைக்கின்றன. ஹஸ்ரத் கத்தாதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பத்ர் போர் நாளன்று அன்னாரின் கண்ணில் அடிபட்டது. அன்னாரின் கண் அன்னாரின் கன்னத்தில் இறங்கி வந்து விட்டது. அதாவது, அன்னாரின் கருவிழி வெளியே வந்துவிட்டது. அன்னார் அதனை கீழே எறிந்து விடுவதற்கு எண்ணம் கொண்டுவிட்டார்கள். ஸஹாபிகள் ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் இது தொடர்பாக முறையிட்டார்கள். அப்போது, வேண்டாம்! அவ்வாறு செய்ய வேண்டாம்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், ஹஸ்ரத் கத்தாதா (ரலி) அவர்களை தம்மிடம் வரவழைத்தார்கள். மேலும், தமது உள்ளங்கையில் அன்னாரின் கண்ணை வைத்தார்கள். மேலும், அதனை அதனுடைய இடத்தில் வைத்துவிட்டார்கள். அதாவது, கண்ணை அதனுடைய இடத்தில் பொருத்தி விட்டார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: தமது ஒரு கண்ணிற்கு இவ்வாறு வேதனை ஏற்பட்டதாக தமக்கு நினைவு கூட இல்லை.

பின்னர், கண் எவ்வாறு பொருந்திக் கொண்டது மேலும் குணமாகிவிட்டது என்றால், இந்தக் கண் ஒரு காலத்தில் வெளியேறி இருந்த கண் ஆகும் என்ற உணர்வு கூட அன்னாருக்கு ஏற்பட்டதில்லை. இன்னும் கூறப்போனால், இந்தக் கண் மற்றக் கண்ணை விட மிகவும் அழகுவாய்ந்ததாக இருந்து வந்தது.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 53, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்,1993)

சில நூல்களில் கண் குணமடைந்த இந்த சம்பவம் உஹது போரில் நிகழ்ந்த சம்பவம் என்று கூறப்பட்டுள்ளது. இது அகழ்ப் போர் சம்பவம் என்று சிலர் கூறுகின்றனர். (அஸதுல் காபா, தொகுதி 4, பக்கம் 371, கத்தாதா பின் நுஃமான் அன்ஸாரி,தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் - 2016)

ஆனால், எவ்வாறு இருப்பினும் இந்த அற்புதம் பத்ர் போர் சந்தர்ப்பத்தில் நிகழ்ந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

நிராகரிப்பாளர்களின் தோல்விக் குறித்த செய்தி மக்காவில் எவ்வாறு சென்றடைந்தது? இது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது: இணை வைப்பாளர்கள் பத்ர் போர் மைதானத்திலிருந்து ஒழுங்கற்ற வடிவில் தப்பி ஓடியவாறு சிதறுண்டவாறு பதற்றத்துடன் மக்காவை நோக்கிச் சென்றார்கள். மக்காவிற்குள் எவ்வாறு நுழைவது? என்று அவர்களுக்கு வெட்கத்தின் காரணமாக புரியாமல் இருந்தது.

முதன் முதலில் மக்காவில் குறைஷிகளின் தோல்வியைக் குறித்த செய்தியை கொண்டு வந்த நபர் ஜைஸமா பின் அய்யாஸ் பின் அப்தில்லாஹ் ஆவார். இவர் பிற்காலத்தில் முஸ்லிம் ஆகிவிட்டார். மக்கள் அவரிடம், என்ன செய்தி உள்ளது? என்று கேட்டனர். அதற்கு, உத்பா பின் ரபீஆ, ஷைபா பின் ரபீஆ, அபூல் ஹகம் பின் ஹஷ்ஷாம் அதாவது அபூஜஹ்ல், உமையா பின் கலஃப் மற்றும் இன்னும் சில தலைவர்களின் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் அனைவரும் கொலையுண்டு விட்டார்கள் என்று அவர் கூறினார். அவர் கொலையுண்டவர்களில் குறைஷிய தலைவர்களின் பெயர்களை குறிப்பிடத் துவங்கியபோது மக்களுக்கு அதன் மீது நம்பிக்கை வரவில்லை. ஹதீமில் அமர்ந்திருந்த ஸஃப்வான் பின் உமைய்யா இதைக் கேட்டு விட்டு, நம்பமுடியவில்லை ; அநேகமாக இந்த நபர் பைத்தியம் ஆகிவிட்டார் என்று கூறினார். சோதித்து பார்ப்பதற்காக, ஸஃப்வான் பின் உமைய்யா எங்கே இருக்கின்றார்? என்று இவரிடம் கேளுங்கள் என அவன் கூறினான். அதாவது தன்னைப் பற்றி அவன் கூறினான். ஸஃப்வான் பின் உமைய்யாவிற்கு என்ன ஆனது? என்று மக்கள் கேட்டனர். அதற்கு, அதோ பாருங்கள்! அவர் ஹதீமில் அமர்ந்திருக்கின்றார்; எனக்கு பைத்தியம் பிடிக்கவில்லை; நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். இறைவன் மீது ஆணையாக! அவரது தந்தையும், அவரது சகோதரரும் கொலையுண்டதை நான் எனது கண்களால் கண்டேன் என்று அந்த நபர் கூறினார். அதாவது, இந்த நபர் உண்மையான செய்தியையே கூறுகின்றார் என்று அப்போது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

சுருக்கமாக, இவ்வாறு மக்கா வாசிகளுக்கு பத்ர் போர் மைதானத்தில் தோல்வி குறித்த செய்தி கிடைத்தது. மேலும், அவர்களின் இயல்பில் எந்த அளவிற்கு மோசமான தாக்கம் ஏற்பட்டது என்றால், கொலையுண்டவர்களுக்காக ஒப்பாரி வைப்பதற்கு அவர்கள் தடை செய்து விட்டார்கள். ஏனெனில், தங்களின் சோகத்தில் முஸ்லிம்கள் மகிழ்ச்சி அடைவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்தனர். (அர் ரஹீகுல் மக்தூம், பக்கம் 307 - 308, அல்மக்தபஸ் ஸல்ஃபியா)

மக்கத்து குறைஷிகளில் சிலர் கொலையுண்ட தம்மவர்களுக்கு ஒப்பாரி வைத்தபோது, அவ்வாறு செய்யாதீர்கள் என்று அவர்கள் கூறினர். அதாவது ஒப்பாரி வைத்தவர்களிடம் மற்றவர்கள் கூறினர். ஏனெனில், முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் ஸஹாபிகளுக்கும் இந்த செய்தி கிடைக்கும்போது அவர்கள் உங்களது இந்த நிலையை அறிந்து மகிழ்ச்சியடைவர். மேலும், உங்களது கைதிகளை விடுவிப்பதற்காக எவரையும் அனுப்பாதீர்கள். எதுவரை என்றால், நீங்கள் அவர்களைக் குறித்து மிகவும் ஆழ்ந்து சிந்தித்துக் கொள்ளுங்கள்.

ஒப்பாரியும் வைக்காதீர்கள்; உங்களது கைதிகளை விடுவிப்பதற்கு முயற்சியும் செய்யாதீர்கள். ஏனெனில், முஹம்மது (ஸல்) மற்றும் அவரது ஸஹாபிகள் ஈட்டுத் தொகையின் விவகாரத்தில் உங்கள் மீது கடுமை காட்டாமல் இருப்பதற்கு அவ்வாறு செய்யுங்கள். (ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 441 - தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் - 2001)

மதீனா வாசிகளுக்கு வெற்றியின் செய்தி எவ்வாறு கிடைத்தது? மேலும் அதன் எதிர் வினை எவ்வாறு இருந்தது? என்பது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை மதீனாவின் மேல் பகுதியின் பக்கமும், ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸ் (ரலி) அவர்களை மதீனாவின் தாழ்வான பகுதியின் பக்கமும் அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களுக்கு வழங்கியிருந்த நற்செய்தியை வழங்குவதற்காக அனுப்பினார்கள். (அஸ்ஸீரன் நபவிய்யா லி இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 437 - 438, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் -2001)

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் துணைவியாரும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் புதல்வியுமான ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களின் கப்ரின் மீது நாங்கள் மண்ணை போட்டு மூடியபோது எங்களுக்கு இந்த செய்தி கிடைத்தது. அப்போது அன்னார் (ரலி) மரணமடைந்திருந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் என்னையும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களை கவனித்துக் கொள்வதற்காக பின்னால் விட்டுச் சென்றிருந்தார்கள். எனது தந்தையார் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மக்கள் சூழ்ந்திருந்தபோது நான் அன்னாரின் பக்கம் சென்றேன். உத்பா பின் ரபீஆ, ஷைபா பின் ரபீஆ, அபூஜஹ்ல் பின் ஹிஷ்ஷாம், ஸம்அஃ பின் அஸ்வத், அபூ அல்பக்தரீ, ஆஸ் பின் ஹிஷ்ஷாம், உமைய்யா பின் கலஃப் மற்றும் ஹஜ்ஜாஜின் இரண்டு மகன்களான நுபைய்யா மற்றும் முனப்பாஃ ஆகியோர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று அன்னார் (ரலி) அப்போது கூறிக் கொண்டிருந்தார்கள்.(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 438, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2001)

அதேநேரம் மதீனாவின் நிலவரம் இவ்வாறு இருந்தது. அதாவது, முஸ்லிம்களுக்கு மிக மோசமான தோல்வி கிடைத்துவிட்டது; மேலும், நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்று வதந்திகளை நயவஞ்சகர்களும் யூதர்களும் பரப்பி மதீனாவை பரபரப்பாக்கி வைத்திருந்தனர். இந்த வதந்திகளின் இருள்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தின் மீது அமர்ந்தவாறு மதீனாவில் நுழைந்தபோது, பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (நவூதுபில்லாஹ்) கொலையுண்டு விட்டார்கள்; மேலும் ஒட்டகத்தில் ஸைது (ரலி) வந்து கொண்டிருக்கின்றார் என்று யூதர்களும், நயவஞ்சகர்களும் இன்னும் அதிகமாக கூறத் தொடங்கிவிட்டனர்.

உத்பாவும் கொல்லப்பட்டுவிட்டான்; ஷைபாவும் கொல்லப்பட்டுவிட்டான்; அபூஜஹ்லும் கொல்லப்பட்டுவிட்டான்; உமைய்யாவும் கொல்லப்பட்டு விட்டான்; என்று ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கூறத் தொடங்கிய போது, இது எப்படி சாத்தியம் ஆகும்?; முஸ்லிம்களின் தோல்வி மற்றும்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 24 August 2023 Issue No. 34

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


முஹம்மது (ஸல்) அவர்களின் மரணம் ஆகியவற்றின் காரணமாக ஸைது சுய நினைவை இழந்து விட்டார்; எனவேதான் இவ்வாறு இவர் பேசுகிறார் என நயவஞ்சகர்கள் கூறத் தொடங்கி விட்டனர். நிராகரிப்பாளர்களின் எதிர்வினை மக்காவில் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே மதீனாவிலும்

நயவஞ்சகர்கள் மற்றும் யூதர்களின் எதிர் வினையாக இருந்தது.

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஏனெனில், நான் இந்த அனைத்து விஷயங்களையும் மதீனாவில் கேட்டுக் கொண்டிருந்தேன். எனவே நான் எனது தந்தை ஸைது (ரலி) அவர்களை ஒரு பக்கமாக அழைத்துச் சென்றேன். மேலும், தந்தையே! நீங்கள் கூறுவது உண்மையில் சரியான விஷயம் தானா? என்று நான் கேட்டேன். அதற்கு, மகனே! இறைவன் மீது ஆணையாக! அப்படித்தான் நடந்துள்ளது. (உண்மைதான்). நான் என்ன கூறுகின்றேனோ அது உண்மைதான் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

இந்த செய்தி கிடைத்த உடனேயே வெற்றிபெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குழுவினருக்கு உணர்வுப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவிப்பதற்காக மதீனா வாசிகள் ஒன்று திரண்டனர். முஸ்லிம்கள் இந்த வெற்றியை கொண்டாடினர். மேலும், மகிழ்ச்சியடைந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்காக அவர்கள் மிகவும் தீவிரமாக காத்திருந்தனர்.

இந்தப் போரில் அனைத்து முஸ்லிம்களும் கலந்து கொண்டிருக்கவில்லை. ஏனெனில், மதீனாவிலிருந்து புறப்படும் போது போருக்கான எண்ணமே இருந்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் செய்தியை அறிந்து சில முஸ்லிம்கள் வரவேற்பதற்காக மதீனாவிற்கு வெளியில் சென்றுவிட்டார்கள். ரூஹா என்ற இடத்தில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள். அவர்களின் மகிழ்ச்சி கண் கொள்ளா காட்சியாக இருந்தது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிராகரிப்பாளர்களுக்கு எதிராக பெற்ற வெற்றிக்காக வாழ்த்துகளை தெரிவிக்க தொடங்கினர். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தார்கள். அங்கு இருந்த அனைத்து முஸ்லிம்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வரவேற்றார்கள். (தாயிராயே மஆருஃபே ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனும் நூல் - தொகுதி 6, பக்கம் 233 -234, ஏப்ரல் -2022)

இந்தப் போரில் கிடைத்த போர் செல்வங்களைக் குறித்து குறிப்பு கிடைக்கின்றது: அது இவ்வாறாகும்:

இந்த வெற்றியின் மூலம் முஸ்லிம்களுக்கு போர் செல்வங்களில் 150 ஒட்டகங்களும், 10 குதிரைகளும் கிடைத்தன. இது மட்டுமின்றி எல்லா வகையான பொருட்களும், ஆயுதங்களும், துணிகளும், எண்ணற்ற தோல்களும், வண்ணமயமான தோல் பைகளும், கிடைத்தன. அவற்றை இணை வைப்பாளர்கள் தங்களுடன் வியாபாரத்திற்காக கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். ( அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி2, பக்கம் 252, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2002)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது பங்கையும் ஸஹாபிகளின் பங்குகளுக்கு நிகராகவே வைத்தார்கள். இந்தப் போரில் ஒரு வாளை ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக வைத்துவிட்டார்கள். மேலும், ஒட்டகங்களில் ஓர் ஒட்டகம் அபூஜஹ்லின் சொத்திலிருந்து ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்தது. அதன் மூக்கில் வெள்ளிக் கயிறு இருந்தது. (கஸ்வாதே அன்நபி (ஸல்) அவர்கள் - நூலாசிரியர் மவ்லானா அபுல்கலாம் ஆஸாத், பக்கம் 43 -44, ஸிட்டி புக் பாயின்ட் காராச்சி, 2014)

இந்த வாள் மற்றும் ஒட்டகத்திற்கும் ஸீரத் நூல்களில் சிறப்பு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதன் விளக்கம் இவ்வாறாகும்:

அதன் பெயர் ஸூல்ஃபிகார் ஆகும். அதன் உரிமையாளர் பத்ர் போரில் கொல்லப்பட்ட ஓர் இணை வைப்பாளனான ஆஸ் பின் முன்னபஹியா முனப்பா பின் ஹஜ்ஜாஜ் ஆக இருந்தான். சில அறிவிப்புகளுக்கு ஏற்ப இந்த வாள் அபூஜஹ்லுடையதாக இருந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த வாளின் பெயரை அப்படியே தொடரச் செய்தார்கள். (துபகாத்துல் குப்ரா லி இப்னி ஸஃது, தொகுதி 1, பக்கம் 377, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2012)

இந்த வாளைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இந்த வாள் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விலகவில்லை. ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் போர்களில் அந்த வாளை தம்முடன் வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு இந்த வாள் அப்பாஸி கலீஃபாக்களிடம் இருந்தது. (ஷரஹ் அஸ்ஸூர்கானீ,தொகுதி 5, பக்கம் 85 -87, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இதேபோன்று பத்ர் போரின் வெற்றிக்குப் பிறகு போர் செல்வமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்த அபூஜஹ்லின் ஒட்டகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது. எதுவரை என்றால், ஹுதைபிய்ய உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை குர்பானி விலங்காக எடுத்துக் கொண்டு சென்றார்கள். அது தொடர்பாக ஒரு சம்பவம் இவ்வாறும் கிடைக்கிறது. அதாவது இந்த ஒட்டகம் ஹுதைபிய்ய மைதானத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது அது தப்பி ஓடியது. எதுவரை என்றால், மக்காவில் அபூஜஹ்லுடைய வீட்டைச் சென்றடைந்தது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் பின் அனமஹா அன்ஸாரீ (ரலி) அவர்கள் அதனை பின் தொடர்ந்து சென்றார்கள். ஆனால், மக்காவின் ஆக்ரோஷம் மிக்க இயல்பு படைத்த சிலர் அதனை திருப்பி கொடுக்க மறுத்து விட்டனர். ஹுதைபிய்ய உடன்படிக்கையின் நேரத்தில் ஸுஹைல் பின் அம்ர் குறைஷிகளின் பிரதிநிதியாக இருந்தார். அவர் அந்த மக்களுக்கு அந்த ஒட்டகத்தை திருப்பி ஒப்படைக்க கட்டளை வழங்கினார். எனவே அவர்கள் அதனை திருப்பி ஒப்படைத்துவிட்டனர். நீங்கள் இதற்கு பகரமாக நூறு ஒட்டகம் கொடுப்பதாக கோரிக்கையை முன்வையுங்கள்; முஸ்லிம்கள் அதனை ஏற்றுக் கொண்டு விட்டால் இந்த ஒட்டகத்தை தடுத்து நிறுத்திக் கொள்ளுங்கள்; அவர்கள் மறுத்துவிட்டால் திருப்பி ஒப்படைத்து விடுங்கள் என்று அவர் அந்த மக்களிடம் கூறினார். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் இதனை குர்பானி விலங்குகளுடன் சேர்க்காமல் இருந்திருந்தால் பின்னர் நாங்கள் இதனை உங்களுக்கு கொடுத்திருப்போம். ஆனால், இது ஏற்கனவே குர்பானிக்காக சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தற்போது முடியாது.

ஆக, அன்னார் (ஸல்) முஸ்லிம்களின் சார்பாக அதனை அறுத்து பலியிட்டு விட்டார்கள்.

(ஸூபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 57, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு, 1993-ம் ஆண்டு)

இதன் தொடர்ச்சி - 9ம் பக்கம்...


**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005


Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad